
# திருக்கோயில்

அக்டோபர் 1992 விலை ரூ. 3





திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஆலய மகாசம்ப்ரோட்சணம் யாகசாலை பூஜையின் போது நம் ஆணையாளர் திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தம் குடும்பத்தாருடன் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும், உதவி ஆணையாளருமான திரு கோலப்பபிள்ளை உடன் உள்ளார்.

முகப்பு:
மேலூர் திருவுடையம்மன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கீரச ஆண்டு ஐப்பசி அக்டோபர் 1992 விலை ரூ. 3-00 | மணி: 10

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் உள்ளம்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

சித்திரபாரதம் — செவ்வேள்

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

கீதைக் குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

பரகாயப் பிரவேசம் — திருமதி ஜ. கமலா

பாவப் பதிவுகளும் போக்கும் வழிகளும்
— யோகிராஜ் வேதாந்திரி மகரிஷி.

ஆடல் காணீரோ— திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

ஐந்தெழுத்துமந்திரம் — கனகசுப்பிரமணியம்

பட்டினத்தார் பாடிய திருவிடைமருதூர்
— அன்பு அருணாசல அடிகை .

மலைநாட்டுத் திருப்பதிகள் — நித்திலக்கோ

திருக்கோயில் நந்தவனப் பராமரிப்புத் திட்டத் தொடக்க விழா — நிறைமதி

## தீபாவளி வாழ்த்துக்கள்

**இல்லந்தோறும் மத்தாப்பூ சிரித்திட**
**உள்ளந்தோறும் மகிழ்ச்சி பொங்கிப் பூரித்திட**
**அனைவருக்கும் ஆனந்த தீபாவளித் திருநாள் வாழ்த்துகள்.**

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



திருமந்திரச் செம்மல்
டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.




'திருமந்திரச் செம்மல்'

**திருமிகு டி.வி வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்**

**(16)**

சிவபெருமான் திருவருளால் பிரபஞ்ச இயக்கம் நடைபெறுகிறது. உயிர்கள் உடலோடு சேர்ந்து, வாழ்க்கை அனுபவம் பெற்று வினைப்பயன்களை நுகர்கின்றன. உயிர்களை கட்டி நிற்கும் பாசத் தளைகளை தளர்த்திக் கொள்கின்றன. இவற்றிற்கெல்லாம் மூல காரணம் இறைவனது அருளே. இறைவன் உயிர்களுக்கு அப்பாற்பட்டு இருப்பதோடு, அவற்றை நடாத்தியும் செல்கின்றான். உயிருக்கு உயிராக நின்று அதற்கு இயங்கும் தன்மையினை வழங்குகின்றான். இறைவனுடைய அருளால் உயிருடைய அறிவாற்றல் செயல்படுகின்றது. இந்த உண்மை நிலையினை திருவருளால் கண்டு உணர்வதே அக பூஜையாகும். இந்தக் கண்டு உணர்தல் மனவாலயத்தில் நடைபெறுகின்றது. அந்த உணர்வினால் உள்ஒளி பெறுகின்ற அறிவானது தன் நிலையைப் புரிந்து கொள்கிறது. இறைவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பினை தெரிந்து கொள்கின்றது. இறைவனுடைய திருவடிகளிலே தன்னை அர்ப்பணித்துக் கொள்வதையே பெரிய பேறாகக் கருதுகின்றது. இறை அருள் நிரம்பிய உள்ளம் அன்புமயமாகின்றது. அந்த அன்பு ஈசனுக்கு மட்டுமல்லாது எல்லா உயிர்களையும் தொட்டு தன்னுள் அடக்கிக்கொள்கின்றது. இந்த ஒப்பற்ற நிலையே ஞான நிலையாகும். பக்குவமடைந்த உயிரானது இந்த நிலையிலே ஊன்றி நிற்பது ஞான பூசையாகும். திருவருளைத் தவிர வேறொன்றுமில்லை என்கிற அறிவு உள்ளத்திலே ஆழமாகப் பதிந்து, அதைப்பற்றி சிந்திக்க சிந்திக்க உள்ளத்தைத் தேனினும், பாலினும், கரும்பினும் மிக்க இன்பத்தால் நிரப்புகிறது. அரன் மீது அன்பு வைக்கும் பண்பு தானாகவே, இயல்பாகவே உள்ளத்தில் எழுந்து, உயிரினை அருளுடைய பொருளாக்குகின்றது.

உயிரானது உள்ஒளி பெற்று திருவருளை உணர்ந்து கொண்டு, திருவருளோடு தன்னை இணைத்துக் கொள்வது ஞான வழிபாடாகும். இதனை திருஞான சம்பந்தப் பெருமான் "ஞான மாமலர்" என்பார். அவர் பாண்டி நாட்டில உள்ள தலங்களுக்குச் சென்று வழிபட்டபோது திருக்கானப்பேர் எங்கிற திருத்தலத்திற்கு வந்தார். இப்பொழுது இந்தத் தலம் காளையார் கோவில் எனப் பெயர் பெற்றுள்ளது. இந்த இடத்தைப் பற்றிய புராணச் செய்தி ஒன்று இருந்தது. இந்திரனுடைய யானை ஐராவதமாகும். ஒரு காலத்தில் ஐராவதம் சாபம் பெற்று, காட்டு யானையாகி இத்தலத்திற்கு வந்து, சிவபூஜை செய்து முன்னிலை பெற்றது. திருஞானசம்பந்தப் பெருமான் இந்தச் செய்தியை கேள்வியுற்றார். காட்டு யானை ஒரு பெண் யானையுடன் வந்து, இறைவனுக்கு தலைவணங்கிய இடம் என்பதை அவருடைய கற்பனையில் வைத்தார். பெரிய யானை இடத்தை சுத்தம் செய்கின்றது. பெருக்குகின்றது. இரண்டு யானைகளும் இறைவனை மலர்களால் பூசிக்கும் ஒரு காட்சி அவருடைய மனதிலே மேலும் சிந்தனையைப் பெருக்குகின்றது. யானையை ஆணவத்திற்கு



அறிகுறியாக சொல்லுவது வழக்கம். மதப்மிக்க யானைகளை உடலிலே இயங்குகின்ற இந்திரியங்களுக்கு ஒப்பாகவும் சொல்லுவதுண்டு. ''ஆக மதத்தன ஐந்து களிறுள'' என்பார் திருமூலர். இந்த ஐந்து யானைகளை அடக்கி, ஞானத் திரியைத் தூண்டுவது உயிரின் நோக்கமாகும்.

''ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி....

(திருமந்திரம்..2316)

இந்திர லோகத்தில் ஆணவத்தால் செருக்குற்ற ஐராவதம், சாபக் கேட்டினால் திருக்கானப்பேருக்கு வந்து, இறைவனை அர்ச்சிதது தலைகுனிந்து நடந்து, தனது சாபத்தை போக்கிச் கொள்கிறது. திருக்கானப்பேருக்கு வந்து இறைவனைத் தொழும் ஒவ்வொரு மனிதனும், பிறப்பின் குறிக்கோளை அடையலாம். உடம்பிலுள்ள குறைகளை நீக்கிக் கொள்ளலாம். நோய்களைத் தீர்த்துக் கொள்ளலாம். உள்ளத் தூய்மையைப் பெறலாம். பாசத் தளைகளிலிருந்து விடுபடலாம். எப்போது? இறைவனை ஞான மாமலர் கொண்டு வழிபடும்பொழுது என்கிறார் திருஞானசம்பந்தர். மலர்களில் சிறந்தது ஞானமாமலர். புறப்பூசைக்கு இயற்கையிலே கிடைக்கும் பலவகையான பூக்கள் பயன்படும். அகப்பூசைக்கு பயன்படுவது உள்ளொளி. ''உணரும் ஒளிவிளக்கு''. அதுவே 'வீறாமலர்.'

''மானமா மடப்பிடி வன்கையால் அலகிடக்
கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணி கெட
எண்ணின்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே''

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

ஞான மலர் அர்ச்சனைக்கு அன்பல்லவா அடிப்படை! அப்பர் பெருமான் வேகமாகப் பேசுகின்றார். புறத்தூய்மை மட்டும் போதாது. அகத்தூய்மையும் வேண்டும் என்பார்கள். பல திருத்தலங்களுக்குச் சென்று தீர்த்தங்களிலே நீராடி, புறத்தூய்மை பெறலாம். ஆனால், அவற்றால் மட்டும் அகத்தூய்மை கிடைக்காது. அகத்தூய்மைக்கு அன்பு மிக தேவை. இறைவனிடத்தில் அன்பு செலுத்தாவிடில், அகத்தூய்மை கிட்டாது. அன்பின்றி செய்யும் பணிகளெல்லாம் தண்ணீரை ஓட்டைக் குடத்தில் சேமித்து வைப்பது போலாகும் என்கிறார் திருமூலர். ஞானத்தினால் அன்பும், அன்பால் ஞானமும் உள்ளத்தில் தோன்றுகின்றன. அன்பும் ஞானமும் இரண்டல்ல. ஞானம் பெற்றார் அன்புடையவராவர். அன்பெனும் பண்பை உடையவர்கள் ஞானம் பெற்றவர்களும் ஆவார்கள்.

''கோடி தீர்த்தம் கலந்து குளித்து, அவை
ஆடினாலும், அரனுக்கு அன்பு இல்லையேல்,
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்துஅட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே.''

(அப்பர் தேவாரம்).



## உன்னைத் தொடரும் உறவு!

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே!
விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே! விம்மிவிம்மியிரு
கைத்தல மேல்வைத்தழு மைந்தரும்
சுடுகாடு மட்டே!
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணியப்
பாவமுமே!

— பட்டினத்தார்

தொன்மைமிக்க திருமயிலாபுரியில் வாழ்ந்தவர் வாயிலார் நாயனார். அகபூசை செய்து சிவனருள் பெற்றார். உயர்ந்த தபோதனர். சிவபெருமானுடைய திருத்தொண்டிலேயே பெருவிருப்பத்துடன் விளங்கினார்.

நாயனார் திருத்தொண்டின் நயப்புறு
மேய காதல் விருப்பின் விளங்குவார்.''
(பெரியபுராணம்-வாயிலார் நாயனார்)

அவரும் இறைவனுக்கு அர்ச்சனை செய்வார். அவருடைய மனமே கோயிலாக அமைந்தது. இறைவன் அவருடைய மனதிலே ஸ்திரமாக நின்றான். வாயிலார் நாயனாருடைய உணர்வெல்லாம் சிவபெருமானைப் பற்றியதே. மனக்கோவிலில் ஒளிவீசும் சுடர் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. சிவபெருமானை உணரும் ஞானமே அந்தச் சுடர் விளக்கமாகும்.

''சிந்தையி னுள்ளே எந்தை திருவடி
சிந்தையும் எந்தை திருவடிக் கீழது''
(திருமந்திரம்..2428)

இறை அன்பினால் நாயனாருடைய உள்ளம் பேரானந்த நிலையில் நின்றது. அந்தப் பேரானந்தமே வாயிலார் மனதிலே வீற்றிருக்கும் சிவனுக்கு ஆட்டிய திருமஞ்சனம். வாயிலாருடைய பேரன்பே இறைவனுக்கு விரும்பிய திருவமுதாகவும் அமைந்தது.

இவ்வாறு வாயிலார் நாயனார் சிவபெருமானை மனக்கோவிலில் இடையறாது நாள் தோறும் வழிபாடு செய்தார். அவருடைய வழிபாட்டிற்கு அன்பே மையமாக விளங்கியது. அந்த அன்பினால் தூய்மையடைந்த உள்ளத்தில், ஞானமாகிய விளக்கு இறைவன் திருவருளால் பிரகாசித்தது. கிடைத்த சிவானுபவம் பேரானந்தத்தை அளித்தது. ''இறவாத இன்ப அன்பு'' பெற்றார் வாயிலார் நாயனார். இறைவனுக்கான தொண்டினை அவர் மனக்கோவிலிலேயே செய்தார். அகத்தே இறைவன் மீது மறவாத அன்பு கொண்டு பலவழிகளிலும் அர்ச்சனை புரிந்தார். பூசைக்குரிய சாதனங்களெல்லாம் அவருடைய மனதிலேயே கிடைத்தன. அவருடைய புலன்களும் பொறிகளும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டன. வாயிலார் நாயனாருடைய வாழ்க்கை அகபூசையின் விளக்கமாகும்.

''மறவாமை யானமைத்த மனக்கோயி
லுள்ளிருத்தி
யுறவாதி தனையுணரு மொளிவிளக்குச்
சுடரேற்றி
இறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
யறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச்
சனைசெய்வார்''

''அகமலர்ந்த வர்ச்சனையி லண்ணலார்
தமைநாளு
நிகழவரு மன்பினா னிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாள்செய்து சிவபெருமா
னடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார் புண்ணிய
மெய்த் தொண்டனார்.''
(பெரியபுராணம்-வாயிலார் நாயனார்)

சிவனடியார்களுக்கே உரித்தானதுஅன்பும் தொண்டும், இந்த அன்பும் தொண்டும் பற்றற்ற நிலையில் நெருப்பிலிட்ட தங்கத்தைப் போல் பிரகாசிக்கின்றன. உலகப் பொருட்கள் மீது பற்றுள்ளவரை இறைவன்பால் அன்பு செலுத்துவதும், இறைவனுக்கு தொண்டு செய்வதும் மனதிற்கு இயல்பாக அமையாது, ஒரு தெய்வத்தை வணங்குவது, அர்ச்சிப்பது, வழிபடுவது போன்றவை சடங்காகவே இருக்கும்; அல்லது பலனை எதிர்பார்த்தே நடக்கும். புலன், பொறிகளிடமிருந்து விடுபட்ட உள்ளம் இயல்பாகவே இறைவனிடம் அமைதி அடையும். ஊனினை நீக்கி உணர வேண்டும் என்பார் திருமூலர்.

''கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே.''
(திருமந்திரம்....1848)

## மீண்டும் பிறவியா?



**இன்னம் பிறக்க இசைவையா நெஞ்சமே?**
**மன்னரிவர் என்றிருந்து வாழ்ந்தாரை-முன்னம்**
**எரிந்தகட்டை மீதில் இணைக்கோ வணத்தை**
**உரிந்துருட்டிப் போட்டது கண்டு.**

—பட்டினத்தார்.

அடியார்கள் இறைவனோடு பின்னிப் பிணைந்து கிடப்பார்கள். அவன் அடியையே பற்றிக் கொண்டிருப்பார்கள். ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்றிருப்பார்கள். 'பாசம் பரஞ்சோதிக்கு அன்டாய்'' என்று திருவெம்பாவையில் காண்கிறோம். காரைக்கால் அம்மையாரும் ''மனக்கு இனியவைப்பாகவைத்தேன்'' என்றார். காரைக்கால் அம்மையார் தேவர்களைப் பார்க்கிறார். மனிதர்களைப் பார்க்கிறார். ஒன்றை எதிர்பார்த்து அவர்கள் இறைவனுக்கு செய்யும் பூசையைக் காண்கிறார். அபிஷேகமும் அர்ச்சனையும் ஆண்டவனுக்கு ஆடம்பரமாக நடக்கின்றன. இறைவன் அவற்றை ஏற்றுக் கொள்வானா? ஏற்றுக் கொள்ள மாட்டான் என்று நினைக்கிறார் காரைக்கால அம்மையார். ஆனால், அதை அவ்வாறு சொல்லவில்லை. ''இனி என்ன செய்வானோ?'' சந்தேகப்படுபவர் போல கவிதை எழுதுகிறார். வெறும் விளம்பரத்திற்காக செய்யும் பூசையை ஆண்டவன் ஏற்றுக்கொள்ள மாட்டான் என்று அவருக்கு நன்கு தெரியும். இறைவனுடைய திருவடிகளில் பொருந்தாத மனம் வெளித்தோற்றத்திற்காக செய்யும் பூசை இறைவனைச் சேராது. உள்ளத்தை இறைவனுடைய திருவடிகளில் பொருந்தி இடைவிடாமல் அவற்றையே நினைந்திருக்கும் மனமே இறைவனுடைய திருவருளைப்பெறும்.

''நினைந்திருந்து வானவர்கள்
நீள்மலரால் பாதம்
புனைந்தும் அடிபொருந்த
மாட்டார்-நினைந்திருந்து
மின்செய்வார் செஞ்சடையாய்,
வேதியனே, என்கின்றேற்கு
என்செய்வான் கொல்லோ இனி?''.
(அற்புதத் திருவந்தாதி)

கருவூர் தேவர் ஓர் சிறந்த இறையுணர்வாளர். ஒரு சிறந்த சித்தரும்கூட. சித்தத்தை சிவன்பால் வைத்தவர். இறைவனிடம் தனது சிந்தையைப் பறிகொடுத்தவர். அந்தநிலையில் சிந்தையால் நினைப்பதற்கு சிந்தையும் காணோமே என்கிறார். இறைவனுடைய திருவுருவத்தை மனதிலே நினைத்துக் கொள்கின்றார். நான் நினைக்கிறேன் என்கிற உணர்ச்சியையும் இழக்கிறார். இறைவன்வயம் ஆகின்றார். இனி செய்வது என்ன இருக்கின்றது? திருமூலரைப் போல ''நான் அவன் ஆன பின் யாரை நினைவது'' என்கிறார்.

''அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்
அழகிய சடையும்வெண் ணீறும்
சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்;
செய்வ (து)என்?''
(கருவூர்த் தேவர் திருவிசைப்பா)

இறைவன் திருவருளில் மனதைப் பறிகொடுத்து, இறைச் சிந்தனையில் தன்னையும், தனது மனதையும் மறந்து விடுவது அடியார்களுடைய தன்மையாகும். அதே நேரத்தில் எல்லாவற்றையும் மறந்துவிட்டு. மனமாகிய கருவியைப் பயன்படுத்தி இறைச் சிந்தனையை தம்முள் நிறுத்தி ஒன்றிப் போவதும் அடியார்களுடைய குணமாகும். திருநாவுக்கரசர் பெருமான் சூலை நோயினால் வருந்துகின்றார். தமக்கையாரிடம் திருநீறு வாங்கி இட்டுக் கொண்டு சிவன் கோவிலில் நுழைகின்றார். அதற்கு முன் சமணராக இருந்த நாவுக்கரசர் பெருமான் சைவத்திற்கு மீண்டார். உடனே பாடும் திருப்பதிகத்தில் பல்லாண்டுகளாக சமணராக இருந்தபோதிலும் தான் சிவபெருமானை ஒரு விநாடிகூட மறக்கவில்லை என்று சொல்கின்றார். உள்ளத்திலே சிவபெருமானை ஒரு விநாடிகூட வணங்காமல் இருந்ததில்லை என்றும் அறிவிக்கின்றார். தனது பொறிகள், புலன்கள் சிவசிந்தனையிலேயே ஈடுபட்டிருந்தன என்பதையும் குறிப்பிடுகின்றார். வேறொரு சமயத்திலே அவர் இருந்தாலும், அவருடைய உள்ளம் உண்மையையே நாடிய காரணத்தால் மனதிலே சிவார்ச்சனை விடாமல் நடைபெற்று வந்தது.

''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என் நாவில் மறந்தறியேன்''.
(அப்பர் தேவாரம்).

பூசலார் நாயனார் சிவபெருமானுக்கு ஒரு கோயில் எடுக்க விரும்பி, பகலும் இரவும் அதையே நினைத்து, அந்த நினைப்பினாலேயே கோவில் எடுத்து திருவருளைப் பெறுகின்றார்.

பூசலார் நாயனார் திருநின்றவூரில் வாழ்ந்தார். பூசலார் நாயனார் சிவன்பால் அன்பு வைத்து, அதனை மேன்மேலும் வளர்த்து,



# பாவியாகாதே!....

ஆவியொடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே- மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலத் திரி.

--பட்டினத்தார்.

சிவப்பரம்பொருளைப் பெறுவதற்காக வேத நீதிக் கலைகளை உணருகின்ற பணியில்தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சிவபெருமானுக்கு கோவில் அமைப்பதற்கான செல்வம் அவரிடம் இல்லை. எனினும், சிவனுக்கு ஒரு கோவிலைக் கட்டி முடிக்க எண்ணினார். மனதில் முதலில் நிதி திரட்ட வேண்டிய பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தேவையான நிதி கிடைக்கவில்லை. எனவே, நினைவினாலேயே கோவில் கட்ட முடிவு செய்து, அதற்குத் தேவையான நிதியை மனதினால் திரட்டிக் கொண்டார். பின்னர், கோவில் கட்ட பல் வேறு சாதனங்களைத் தேடி மனதினால் சேக ரித்துக் கொண்டார். தச்சர்களையும், மற்ற பணியாளர்களையும் திருப்பணிக்காக சேர்த்து அவர்களுக்குப்பல்வேறுபணிகளை நிறைவேற்ற மனதிலே கட்டளையிட்டார். இறைவன் மீது உள்ள அன்பினாலே, ஆசை மிகுந்து, ஆகம விதிப்படி, மனதினாலேயே பணியாற்றி இரவும் பகலும் கோவில் எடுத்தார். பல சித்திர வேலைப்பாடுகளை மனதினாலே செய்து முடித் தார். சிவாகம விதிப்படி விமானமும் சிகரமும் இருக்க வேண்டிய அளவுகளை நிர்ணயித்து அவற்றிற்கேற்ப நினைவிலேயே கட்டி முடித் தார். பின்னர், தூபியை நாட்டி, தீர்த்தக் கிணறுகளைக் கட்டி, கோவிலைச் சுற்றி மதில் களைக் கட்டி, தடாகம் அமைத்து, பலவித சிற்ப அலங்காரங்களைச் செய்து கோவிலைக் கட்டி முடித்தார். இவையெல்லாமே பூசலார் நாயனாருடைய மனதிலே நடக்கின்றன. வேறொன்றையும் சிந்தியாமல் பூசலார் நாய னார் இவற்றையெல்லாம் மனதிலேயே செய் தார் என்றால் இறைவன்பால் அவருக்கிருந்த ஆழ்ந்த அன்பு அவருடைய பணிக்கு உறுதுணை யாக இருந்தது என்பது விளங்கும். நாயனா ரும் கும்டாபிடேகம் செய்வதற்கான நாளை யும் முடிவு செய்தார்.

இந்த நிலையில் அப்போதிருந்த பல்லவ அரசன், காஞ்சியிலே ஏராளமான செலவில் கற்கோவில் எடுத்து இறைவனைப் பிரதிட்டை செய்ய நாளும் நியமித்தான். அதற்கு முதல் நாள் இரவில் இறைவன் அவனது கனவில் தோன்றி திருநின்றவூரில் பூசலார் என்கிற அன்பன் நீண்ட நாட்களாக நினைந்து நினைந்து ஒரு கோவிலைக் கட்டியமையால், அங்கு தாம் புக வேண்டுமென்றும் பல்லவ அரசன் தனது கோவில் பிரதிட்டைக்கு வேறொரு நாளை நியமித்துக் கொள்ளலாம் என்றும் பணித்தான். இறைவன் தொண்ட ராகிய பூசலார் நாயனாருடைய அன்புப் பணியை உலகம் அறியும்பொருட்டே இவ் வாறு செய்தான் என்று சேக்கிழார் பெருமான் கருதுகின்றார். அத்தகையதொரு திருப் பணியை தானும் கண்டு மகிழ வேண்டும் என் கிற எண்ணத்துடன் அரசன் திருநின்றவூருக்கு வந்தடைந்தான். அங்கே பூசலார் நாயனார் கட்டிய கோவிலைப் பற்றி ஊர் மக்களைக் கேட்டான். அவர்கள் அவ்வாறு செய்யப்பட்ட கோவில் ஒன்றும் இல்லை என்றார்கள். அரசன் மறையோர்களை அழைத்து மீண்டும் கேட்க அவர்கள் பூசலார் ஓர் குற்றமற்ற வேதியர் என்று தெரிவிக்கின்றனர். அரசன் பூசலார் இருந்த இடத்திற்குச் சென்றான். அவர்எடுத்த கோயிலைப் பற்றிக் கேட்கின்றான். பூசலாரும் மருண்டு அரசனைப் பார்த்து தனக்கு நிதி கிட்டாமையால் கற்கோவில் கட்ட இயலாத நிலையில் மனத்தினாலே முயன்று, நினைந்து நினைந்து சிந்தனையின் செயலாக தான் கட்டிய கோவிலைப் பற்றி விளக்கிக் கூறினார். இதைக் கேட்ட அரசன் மிக வியந்து 'என்னே புரையறு சிந்தை அன்பர் பெருமை!' என்று அவரைப் போற்றி, அவர் முன விழுந்து வணங்கி, அவரை விட்டு பிரிந்தான்.

பூசலார் நாயனாரும் தாம் மனதினால் அமைத்த ஆலயத்தில் இறைவனை நல்ல வேளையில் தாபித்து, எல்லாவிதமான பூசனை களையும் மனதினாலேயே பல நாட்கள் செய்து இறைவன் திருவடி சேர்ந்தார்.

''அன்பரு மமைத்த சிந்தை யாலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்
பின்புபூ சனைக ளெல்லாம் பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார்''

—பெரியபுராணம் (பூசலார்நாயனார்புராணம்)

**(தொடர்ந்து வரும்)**



மைந்தா! உன்னையும் உன் தம்பிகளையும் கொல்ல துரியோதனன் சதிசெய்து, காள மாமுனிவர் மூலம் ஒரு பூதத்தை உங்கள் மேல் ஏவினான். அப்பூதத்திடமிருந்து உங்களைக் காப்பாற்றவே நான் இந்த நச்சுப் பொய்கையை உருவாக்கினேன். பூதத்தால் இனி உங்கள் உயிருக்கு ஆபத்து இல்லை. பன்னிரண்டு வருட வனவாசம் முடிவதால், இனி எஞ்சியுள்ள ஓராண்டுக் காலம் நீங்கள் யாருக்கும் தெரியாமல் மறைந்து வாழுங்கள்
வெற்றி உங்களுக்கே!
சித்திர பாரதம்
பாண்டவர்களை வாழ்த்தும் எமதருமர், தருமருக்கு சிறந்த பல அஸ்திரங்களை அளித்து அவற்றைப் பிரயோகிப்பதற்கான மந்திரங்களையும் உபதேசித்து மறைகின்றார்.
குடிலுக்குத் திரும்பும் பாண்டவர்கள், துரோபதையிடம் நிகழ்ந்தது அனைத்தையும் கூறுகிறார்கள். முனிசிரேட்டர்களிடம் நல்லாசி பெற்று புறப்படுகிறார்கள்
"ஓராண்டுக்காலம் நாம் மறைந்து வாழ்வதற்குத் தகுதியான நாடு எது" என தருமர் வினவ "நீதிநேர்மையிலும் செல்வ வளத்திலும் சிறந்து விளங்குவதான விராட மன்னன் ஆளும் மச்சதேசம் செல்லலாம்" என்கிறான் அருச்சுனன்.
அதன்படி விராடன் நாட்டெல்லையை அடையும் பாண்டவர்கள் காளிகோயில் முன் புறம் உள்ள வன்னி மரத்தில் தம் ஆயுதங்களை மறைத்து வைக்கிறார்கள்.
தருமர் ஒரு துறவியின் வேடத்தில் விராட மன்னரிடம் போகிறார்.
வீர மன்னா! யான் தருமருக்கு தோழனாகிய கங்கப்பட்டன். உன்னிடம் சில காலம் தங்கியிருக்கலாம் என வந்திருக்கிறேன்.
என் நல்வினைப்பயனே நீங்கள் என்னை நாடிவந்தது
கங்கபட்டரை உற்றதோழராய் ஏற்றுச் சிறப்பிக்கிறான் விராட மன்னன்.
சில தினங்களில் வீமனும் சமையற்காரனாக வந்து சேருகிறான்.
அரசருக்கரசே! யான் வீமராஜனின் சமையற்காரனாய் பணியாற்றிய பலாயனன். என்னை ஏற்றருள வேண்டும்.


ஊர்வசி தந்த சாபத்தின் துணையால் பேடியாக உருமாறி வந்து சேருகிறான் அருச்சுனன்.
ஆடற்கலை வல்ல பிருகந்நளை யான்.
என் மகள் உத்தரைக்கு ஆடலும் பாடலும் கற்பித்து, இங்கேயே தங்கியிரு.
பாக்கியம் மன்னா
தாமக்கிரந்தி எனும் பெயரில் அரண்மனைக் குதிரைகளைப் பரிபாலிப்போனாக நகுலனும், தந்திரிபாலன்
எனும் பெயரில் அரண்மனை ஆநிரைகளைப் பரிபாலிப்போனாக சகாதேவனும் பணியில் சேர்கின்றனர்
துரோபதை விராடன் தேவியான சுதேட்டிணையின் அந்தப்புரத்தை அடைகிறாள்.
அருங்குண அரசியே! யான் துரோபதைக்கு அலங்காரம் செய்யும் பணிப்பெண்ணாய் வீற்றிருந்த விரதசாரிணி. ஒப்பனைக் கலையில் வல்ல எனைப் பணி கொண்டருள்க.
அழகிற் சிறந்தவளான விரதசாரிணியைப் பணி கொள்ள தயங்குகிறாள் சுதேட்டிணை.
தேவி! ஆடவர் யார் முகமும் நான் காண மாட்டேன். மேலும் கந்தர்வர் ஐவர் என் கற்பிற்கு காவலராகவும் இருப்பதால் அஞ்சாமல் என்னை நீங்கள் ஒப்பனை மகளாய் ஏற்றிடலாம்.
தேவ மகளே! இனி நாம் உற்றதோழியராய் என்றும் பிரியாது வாழ்ந்திடுவோம்.




**டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்**

**(54)**

விநாயகக் கடவுள் திருச்செங்காட்டுக் கணபதீச்சுரத்தை விட்டுத் தேவர்களுடன் புறப்பட்டு, ஆலங்காட்டையடைந்தார். அம்மை சாபத்தினால் அங்கு ஓர் ஆலமரப் பொந்தில் பாம்பு வடிவத்துடன் தவம் புரிந்து கொண்டிருந்த திருமால் அவரை வணங்கித்துதித்தார். உடனே பாம்பு வடிவம் நீங்கியது.

விநாயகருடைய கருணையால் திருமால் தம் பழைய வடிவைப் பெற்று விநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபாடு புரிந்தார். அப்படி வழிபட்ட நாள் மார்கழி மாதம் சுக்ல பட்சத்து சஷ்டியாகும். அன்று விநாயகரை வழிபட்டோர் எல்லா நலன்களும் எய்துமாறு விஷ்ணு விநாயகரிடம் வரம் பெற்றார். மாலயனாதி வானவர்கள் விநாயகரை வணங்கி ''இத்தனை காலம் கயமுகனிடத்தில் இட்டது போல் உமது சந்நிதியில் நாங்கள் குட்டிக் கொண்டு தோப்புக் கரணம் இடுவோம்' என்றார்கள். விநாயகர் அவ்வாறு செய்து நலம் பெறுவீர்கள் என்று கூறிக் கருணை புரிந்தார்.

''இதுதான் சிவமூர்த்திக்கு மைந்தன் உண்டாகிய தன்மை'' என்றார் ததீசி.

தட்சன் ''சிவனுக்குத் தாமத குணந் தானே உண்டு'' என்றான்.

ததீசி ''ஏ பேதையே! சிவமூர்த்தி சத்துவம், இராஜசம், தாமதம் என்ற முக்குணங்கள் இல்லாதவர். அவர் நிர்க்குணர். ஆனால் சிற்குணர், சங்காரத்தைத் தமோ குணத்தால் செய்வதால் ஈசனைத் தமோ குணமுடையவன் என்று கூறுதல் கூடாது''.

''சிவபெருமான் சாந்த குணக்குன்று, சத்துவகுணம் பெண்மை, அதனால் சிவபெருமான் வெள்ளை நீறு அணிந்து வெள்ளி மாமலையில் வீற்றிருக்கின்றார். சங்கர மகாதேவன் அகில லோக ஏகநாயகன், உயிர்க்குயிராகி எங்கும் இருக்கும் அப்பரமனுடைய தன்மை வேதங்களும் உணராது. பேதையே! நீ சிவ மூர்த்தியைப் போற்றி உய்வாயாக'' என்று இயம்பினார் ததீசி முனிவர்.

ததீசி முனிவருடைய அறவுரை, ஓட்டை ஏனத்தில் விட்ட நீர்போல் ஆயிற்று. தட்சன் கேட்டு ''உங்கள் சிவன் எல்லாஞ் செய்யவல்ல ஈசனேயாகட்டும். அவனுக்குநான்அவிர்ப்பாகம் வழங்கமாட்டேன். உன் உபதேசம் போதும். எழுந்து போ' என்றான். ததீசி முனிவருக்குச் சீற்றம் பொங்கியது. எம்மலையும், எக்கடலும், எவ்வுலகும் யாவும் யாரும் அழியுமோ என்று எல்லோரும் அஞ்சினார்கள். ததீசி முனிவர் தமது சினத்தைத் தணித்து தட்சனைப் பார்த்துக் கூறினார்.

''தட்ச! சிவமூர்த்தியை விலக்கிச் செய்யும் இந்த யாகம் சிதைவதாக, இங்குறையும் தேவரெல்லாம் அழிக. இந்த வேதியர்கள் சிவபக்தியின்றி தீ நெறிப்பட்டுத் திரியக் கடவர்'' என்று கூறினார்.

''பேசரிய மறைகளெலாம் பராபரன் நீ
என வணங்கிப் பெரிது போற்றும்
ஈசனையும் அன்பரையும் நீற்றொடுகண்
டிகையினையும் இகழ்ந்து நீவிர்
காசினியின் மறையவராய் எந்நாளும்
பிறந்திறந்து கதியுறாது
பாசமத னிடைப்பட்டு மறையுரையா
நெறியதனில் படுதிர் என்றான்''

இவ்வாறு பல சாபங்களைக் கூறிவிட்டுத் தம் மாணவர்கள் சூழத் தன் ஆசிரமம் போனார். அவர் பின்னே தட்சனுடைய தவமும், தகவும், புகழும் தொடர்ந்து சென்றது.

ததீசி முனிவர் புறப்பட்டுப் போனபின் யாக கம்பத்தில் கழுகுகளும் காகங்களும் சூழ்ந்தன. தட்சன் மனைவியான வேதவல்லியின் கழுத்திலிருந்த தாலி கீழே விழுந்தது. இவ்வாறு பல துன்னிமித்தங்கள் தோன்றின. இதனைக் கண்டு தீயோனாகிய தட்சன் அஞ்சினானில்லை.

யாகந் தொடங்கப் பெற்றது. காமதேனு ஒரு பொன் மண்டபத்தில் வெள்ளிமலை போல் அன்னத்தை உண்டாக்கியது. சர்க்கரைப் பொங்கல், கறியமுதுகள் குன்றுகளைப் போல் அமைத்தது. பட்சணங்கள், பழங்கள் குவிக்கப் பெற்றன. பால், தயிர், நெய்பாயசம்மடுக்களைப் போல் உண்டாக்கிற்று. வெற்றிலை, பாக்கு, கஸ்தூரி, பனீநீர், சந்தனம், மலர்கள் முதலியவைகளை நிரம்பவும் உண்டாக்கி வைத்தது. அன்றி, சங்கமும், பதுமமும், சிந்தாமணியும் கற்பகமும் அங்கு வந்து வேண்டிய அனைத்தும் வழங்கின. ஒரு புறம் பொன், நவரத்தினங்கள் பொன்னாடைகள் குவிக்கப் பெற்றன.



தட்சன் வேதியர்களை அழைத்து அன்னமும் ஆடையும் சொன்னமும் வழங்கினான். அந்த வேதியர்கள் தட்சனைவாழ்த்தினார்கள். சிலர் பசி தீர்ந்தும் ஆசை தீராது நின்று கொண்டேயிருந்தனர். பாவி பிரமா நமக்கு இந்த உணவுகளை யுண்ணும் பொருட்டு ஒரு முழம் நீளம் வயிற்றைத் தந்தானில்லையே என்று சிலர் வருந்தினர். ஆயிரம் வாய்களும் ஆயிரம் வயிறுகளும் இல்லையே என்று சிலர் கவலைப்பட்டார்கள். 'இத்தனையுந்தரும் காமதேனுவை ஒரு கயிற்றால் கட்டிக்கொண்டு போகலாம்' என்றார் சிலர். நிறைய உண்ட சிலர் எப்படி எழுந்திருப்பதென்று ஏங்கினார்கள். நமது மனைவி மக்களை அழைத்து வரவில்லையே என்று சிலர் வருந்தினர். உண்டவர்க்கு ஒரு புறம் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டன. ஆடைகள், குடைகள், பாதுகைகள், கமண்டலங்கள், தங்கக் காசுகள், நவமணி மாலைகள், பசுக்கள், கன்னியர்கள் முதலியன எண்ணில்லாத அளவில் வழங்கினார்கள். சிவ வேதியர் தலையில் சுபந்து சென்றனர். ஒரு புறம் வீணை புல்லாங்குழல் மத்தளம் முதலிய இசைக்கருவிகள் ஒலித்தன. ஒரு புறம் இன்னிசைப் பாடல்கள் பாடினர்; ஒருபுறம் அரம்பையர் ஆடினர்.

தட்சன் நாராயணரையும் நான்முகனையும் சிறந்த பீடங்களில் இருத்தி யாகம் புரியும் யக்ஞமூர்த்திகளைப் பார்த்து ' 'இனியாகம் புரியுங்கள்'' என்றான். யாகத்தில் சிவ மந்திரங்களை ஒழித்து, ஏனைய தேவதைகளுக்குரிய மந்திரங்களைக் கூறி அத்தேவதைகளை அழைத்தார்கள். அத்தேவதைகட்கு யாகாக்கினி மூலம் அவியை அளித்தார்கள். தேவர்கள் அந்த இனிய அவியை நஞ்செ ன உணராது உண்டார்கள்.

இவ்வாறு வேள்வி நடைபெறும்போது நாரத முனிவர் வந்து பார்த்தார். சிவமூர்த்தியை விலக்கிச் செய்யும் வேள்வியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். திருக்கயிலைமலை சென்று நந்தி தேவருடைய அனுமதி பெற்று உள்ளே சென்று அம்பிகையையும் எம்பிரானையும் பலமுறை பணிந்து துதித்தார்.

எங்கும் நிறைந்து எல்லாம் உணர்ந்த ஈசன் ''நாரதா! என்ன புதுமை? என்று கேட்டருளினார்.

நாரதர் ''கருணைமூர்த்தி! கனகலம் என்ற இடத்திலே மாலயனாதி வானவரை வைத்து மதியில்லாத தட்சன் ஒரு பெரிய வேள்வி செய்கின்றான்'' என்றார்.

இதைக் கேட்ட தாட்சாயணி, இறைவனை இறைஞ்சி ''பெருமானே! என் தந்தை செய்கின்ற யாகத்தை யான் போய்க் கண்டு மகிழ விரும்புகின்றேன். விடை தந்தருளும்'' என்றாள். இறைவர் ''தேவீ! தட்சன் உன்னை அழைத்தானில்லை. அழையாத இடத்துக்குப் போவதுபிழையாகும்'' என்றார். அம்பிகை '' அருட்கடலே! தட்சன் அறிவு குறைந்தவன்; மறந்திருப்பான். என் தங்கையர்கள் யாவரும் அங்கு குழுமியிருப்பார்கள். ஆதலால் போக விரும்புகின்றேன் அனுமதி தாரும்'' என்றாள். விடையூர்தி தந்து விடை தந்தருளினார். எல்லா உலகங்களையும் ஈன்ற எம்பிராட்டி விமானத்தில் ஏறிப் புறப்பட்டாள். பல சேடியர் உடன் சென்றார்கள். நந்தி தேவரின் மனைவி சுகேசை பாதுகையைத் தாங்கிச் சென்றாள்.



## பிறர் பொருளை விரும்பாதே

நம்பொருளை யாராவது கவர்ந்தால் துன்பப்படுகிறோம். நாம் பிறர்பொருளைக் கவரக் கூடாது. நமது மனைவியை ஒருவன் விரும்பிப் பார்த்தால் உள்ளங் கொதிக்கிறது. பிறர் மனைவியை மனத்தாலும் விரும்பக் கூடாது. நம் காலில் முள்குத்தினாலும் வலிக்கின்றது. பிற உயிரைக் கொல்லுதல் கூடாது.

— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்.

கமலினி, அநிந்திதை என்னுங் கன்னியர் பூமாலைகளை ஏந்திச் சென்றனர். தட்சனுடைய வேள்விச் சாலைக்குள் அம்பிகை சேர்ந்தாள். . .

பட்சமில்லாத தட்சன் தாட்சாயணியை வெகுண்டு நோக்கிக் கூறுகின்றான். ''தந்தையும் தாயும் இல்லாத சங்கரன் மனைவியான நீ இங்கு ஏன் வந்தாய்? நான் உன்னை அழைக்கவில்லையே! உன் கணவன் பித்தன்; பேயுடனாடும் பேயன்; தாமத குணத்தினன்; நீ அவனுடன் சேர்ந்து மயக்கமுற்றனை. இதோ பார்; உன் தங்கையர்களும் அவர்களின் கணவர்களும், மாலும் அயனும் என்னை மதித்துச் சூழ்ந்திருக்கின்றார்கள். என்னை மதியாத சிவனுக்கு அவியும் தரமாட்டேன். சிவனுக்கு முதன்மையாகத் தர வேண்டும் என்று சாற்றுகின்ற வேத மொழியையும் மாற்றுகின்றனன். சிவனை நீ சேர்ந்ததால் இங்கு நான் உனக்கு ஒரு சிறப்பையும் செய்ய மாட்டேன். நீ, இங்கு நில்லாது செல்'' என்றான்.

இந்த சாரமும் ஈரமும் இல்லாத கோர மொழிகளைக் கேட்ட வீரத் தாய் பெரிதும் வெகுண்டாள். அம்மையின் சீற்றத்தைக்கண்டு விண்ணும் மண்ணும் கடலும் மலையும் கதிரும் மதியும் நடுங்கின. விமலை என்ற பாங்கி அம்மையை அஞ்சலித்து, ''அகிலாண்டங்களையும் பெற்ற அன்னையே! தாய் சீறினால் சேய்கள் உய்யுமோ? சிறுமதியுடைய இந்த சிறுவிதியைத் தேவரீர் சீறினால் உமது சீற்றம் உலகங்களை யழித்து விடும். பொறுத்தருள் புரியும்'' என்று வேண்டினாள்.

அம்பிகை தன் சீற்றத்தை மாற்றி, தட்சனைப் பார்த்துக் கூறினாள். ''ஏ மதியில்லாதவனே! நீ என்னை இகழ்ந்ததைப் பொறுத்துக் கொண்டேன். என்னையுடைய முன்னை நாயகனை இகழ்ந்த புன்மொழியைப் பொறுக்ககில்லேன். என் செவியைச் சுட்டு விட்டது. சிற்குணமுடைய சிவமூர்த்தி நிர்க்குணமுடையவர். தந்தை மைந்தரைத் தண்டிக்கும்போது அவருக்குள்ள சினம் அருளின் நீர்மையாம். அது போல் இறைவர் உலகங்களைச் சங்கரிக்கின்றபோது தாமதகுணத்தை மேற்கொள்ளுகின்றார். அது அவருக்கு இயற்கையன்று. சர்வசங்காரம் அவர் ஒருவரே செய்யவல்லவர். சர்வ சங்காரம் ஒழியாது. பிறந்து இறந்துவரும் உயிர்கட்கு ஓய்வு தருவதாகும். அதுகருணையால் நிகழ்வதாகும். அழித்த அவரே அளிக்கவும் வல்லவராகும். அப்பரமபதியை — கருணை நிதியை தாமத குணத்தன் என்று நீ சாற்றலாகுமோ? சிவா என்ற ஈரெழுத்துக்களைச் செப்பினோர் எளிதில் நற்கதி நண்ணுவர். சிவமூர்த்தியை நிந்தித்த புந்தியற்றபுல்லிய உனக்கு இப்போது தண்டனை கிடைக்கும்'' என்று இயம்பி அக்கணமே விமான மூர்ந்து கயிலாயஞ் சென்றாள்.

கருணை நாயகரைத் தொழுது ''அண்ணலே! உமை நிந்தித்த தட்சனுடைய யாகத்தை அழித்திட வேண்டும். உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை எனினும் எமக்காகச் செய்தருள வேண்டும்'' என்றனள்.

அப்போது ஆலமுண்ட நீலகண்ட நிமலன் சிந்தித்தார். அச்சிந்தையிலிருந்து அகோரவீர பத்திரர் அவதரித்தார். அவருக்கு ஆயிரம் சிரங்களும், சிரங்கள் தோறும் மூன்று கண்களும், பிறைமதியுடைய முடிகளும், விளங்கியிருந்தன. ஈராயிரந் திருக்கரங்களும் பிரமசிர மாலைகளும், எலும்பு, ஆமையோடு, பன்றிக் கொம்பு இவைகள் புரளும் திருமார்பும் உடையவராய் நின்றார். கரங்கள் தோறும் பலப் பல படைக்கலங்கள் ஒளி செய்திருந்தன. அவருடைய திருமேனியில் நாகாபரணங்களும் ரத்னாபரணங்களும் விளங்கின. வீரக்கழலுடன் திருவடிகள் காட்சி யளித்தன. அந்த வான் வடிவாகிய எந்தையாருடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய வீரபத்திரர்சிவனே எனக் காட்சி தந்தார்.

## துறவின் பெருமை

சந்நியாசியின் காலைத்தான் உலகம் தொட்டு வணங்குகிறதே தவிர கோடீஸ்வரனின் காலை அவனிடம் பணம் பெற்றுக் கொண்டவன்கூடத் தொடுவதில்லை. பெறுதலைவிட, துறத்தலுக் குரிய மரியாதை அதுதான்.

— கவியரசர் கண்ணதாசன்



அப்போது அம்பிகை தன்கோபக்கனலில் இருந்து பத்ரகாளியைப் படைத்தாள். வீர பத்திரரும் பத்ரகாளியும் அம்மையப்பரை வணங்கினார்கள். வேதமூர்த்தியைப்பார்த்து விளம்புகின்றார்.

''தந்தையே! மாலையும் அயனையும் பற்றிக் கொண்டுவர வேண்டுமா? காலனைக் கொல்ல வேண்டுமா? தேவர்களை அழிக்கவோ அசுரர்களை வதைக்கட்டுமா? கடல்களையும் உலகங்களையும் அப்படியே விழுங்கிட வேண்டுமா? எல்லா வுயிர்களையும் எரிக் கட்டுமா? அண்டங்களைத் துண்டங்கள் செய் யட்டுமா? உமது அருளால் எதையும் செய்ய வல்லேன். என்னை ஈன்றது என்ன பணிக்காக?'' உத்தரவு தாரும்'' என்றார்.

சிவபெருமான், 'மகனே! எம்மை விலக்கி தட்சன் வேள்வி செய்கின்றான். நீ அங்கு சென்று நமது அவிர்ப்பாகத்தைக் கேள். அவன் நல்லுணர்வு பெற்று நல்கினால் இங்கு வருக; இல்லையேல் அவன் தலையினை யறுப்பாயாக. அவனை அடுபோரைக் கொல்வாயாக. யாகத்தை அழிப்பாயாக. நாம் அங்கு வரு வோம்'' என்று கட்டளையிட்டார்.

பத்ரகாளியுடன் வீரபத்திரர் புறப்பட் டார். அவருடைய மூச்சுக் காற்றிலிருந்தும், வேர்வையிலிருந்தும் பலப்பல வீரர்களையுண் டாக்கினார்.

''மொழியி லில்பல பூதரை யளித்தனன் மூளரி
விழியி னிற்பல பூதரை யளித்தனன் வேணி
உழியி னிற்பல பூதரை யளித்தனன் உந்திச்
சுழியி னிற்பல பூதரை யளித்தனன் தூயோன்''

''தோளில் எண்ணிலா வீரரை யளித்தனன் சுவையின்
கோளில் எண்ணிலா வீரரை யளித்தனன் குளிர்பொன்
தாளில் எண்ணிலா வீரரை யளித்தனன் தடக்கை
வாளில் எண்ணிலா வீரரை யளித்தனன் வலியான்''

''கையி னிற்சில பூதரை யளித்தனன் களத்தில்
வெய்ய மார்பினில் கன்னத்தில் சிலவரை விதித்தான்
ஐய தோர்முழந் தாள்தனில் சிலவரை யளித்தான்
குய்ய மீதினில் ஊருவில் சிலவரைக் கொடுத்தான்''.

இவ்வாறு வீரபத்திரர் தன்னை யொத்த பல வீரர்களைப் படைத்தார். அதே போல் பத்ரகாளியும் பல்லாயிரங் காளிகளைப் படைத்தாள்.

விடைமுகம், சிங்கமுகம், புலிமுகம், யாளிமுகம், யானை முகம், குதிரை முகம் எனப் பல முகங்களுடன் அவ்வீரர்கள் விளங்கி னார்கள்.

''மடித்த வாயினர்; வானவர் என்பினால்
தொடுத்த கண்ணி துயல்வரு மார்பினர்
தடித்த தோளர்; தனித்தழல் என்னினும்
பிடித்து ண்ணும் பெரும்பசி மிக்குளார்''.

பத்ரகாளியிடந் தோன்றிய காளிகள் ஆயுதந் தாங்கி, அண்டங்கள் வெடிபடக் கர்ச்சித்துப் புறப்பட்டார்கள். பானுகம்பன் முதலிய பூதர்கள் சங்கு முதலிய வாத்தியங் களை முழக்கினார்கள். தண்டன், பினாதி சிங்கன் என்பவர்கள் குடை பிடித்தார்கள். கவரி வீசினார்கள். ஆலவட்டம் அசைத் தார்கள்.

அவ்வண்ணமே காளிகள் பத்ரகாளிக்குக் குடைபிடித்து, மலர்தூவி வாழ்த்திச் சென் றார்கள். புழுதிகள் எழுந்தன. மண்ணும் விண்ணுந் துளங்கின.

வீரபத்ரர் தன் பரிவாரங்களுடன் வேள்வி சாலையை யடைந்தார். தன் சேனைத் தலை வனைப் பார்த்து, ''எம்பிரானை விலக்கித் தட்சன் புரியும் வேள்விச் சாலையில் நின்று ஒருவரும் வெளியேறா வண்ணம் காவல் புரிக'' என்றார். வேள்விச் சாலையைச் சுற்றி கடல் சூழ்ந்ததுபோல் சேனைகள் சூழ்ந்து நின்றன. எதிர்த்து வந்த தட்சனுடைய சேனையைக் கொன்று தின்றன. (தொடரும்)




அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

**அழிவில்லாப் பிர்மம்**
**(அட்சரப்ரஹ்ம யோகம்)**

(குறிப்பு :''பிர்மம், அத்யாத்மம், கர்மம், அதிபூதம், அதிதெய்வம், அதியக்ஞம் என்பன யாவை? இறுதிக் காலத்திலேனும் உன்னை அறிவது எங்ஙனம்?'' என்று அருச்சுனன் எழுப்பிய வினாக்களுக்குக் கண்ணபிரான் விளக்கம் கூறினார்.) (8[1,2)

என்றுமழி வற்றது பிர்மம் எனத்தேர்ந்தோர்
என்னை உணர்ந்தோரா வர். (8[3)

பல்லுயிர்கள் தோன்றும் படிச்செய்வ தெல்லாமவ்
வவ்இயற்கை யின் கர்ம மாம். (8[3)

ஆதிபூதம் என்ப அழியும் பொருளாம்
ஆதிதெய்வம் ஆன்மஅறி வாம். (8[4)

உடலில் உயிரை இயக்கிடும் நானே
உடம்புள் அதியக்ஞ மாம். (8[4)

இறுதிக்கா லந்தனில் என்னை நினைப்போர்
உறுதியாய் என்னையடை வர். (8[5)

எதனின் நினைவு இறுதியில் தோன்றுமோ
அதனை அடைவர் அவர். (8[6)

உன்மனம் புத்தியென்பால் ஒன்றியே போர்புரி!
என்னைநீ வந்தடை வாய். (8[7)

இடையின்றி ஈசனையே நன்று தியானி
அடைவாய் அவனை இனிது. (8[8)

முதற்பொருளாம் ஆண்டவன் முற்றுணர்வோன் மற்றும்
எதற்கும் இருப்பிட மாம். (8[9)

உருவிலான் நுண்ணியன் ஒருவமை இல்லான்
இருள்நீக்கும் பேரொளி யாம். (8[9)

இத்தகை ஈசனைச் சற்றே புருவத்தின்
மத்தியில் கண்டுசிந்திப் போர், (8[10)

அந்தம் நெருங்கும் அவத்தையில் மாறாது
வந்தடைவர் என்னை இனிது. (8[10)

அழிவிலா நானே அடைக்கலம்ஞா னிக்கு;
வழிவொளியாம் பிர்மச்சா ரிக்கு. (8[11)

புலனடக்கிப் புத்தி பிராணனில் ஒன்றிச்
சலனங்கள் நீங்கிய பின், (8[12)

பிரணவமாம் ஓரெழுத்தை ஓதும் புனிதர்
பிரமமே யாவர் இனிது. (8[13)

புலனடக்கிப் புத்திமனம் என்பால் நிறுத்திச்
சலனமற் றோர்க்கெளியன் நான் (8[14)

என்னை அடைந்த அடியார்கள் இப்புவியில்
என்றும் பிறந்திடார் மீண்டு. (8[15)

பிறப்புண்டு பிர்மலோ கத்தினர்க்கும் ஆனால்
பிறப்பில்லை என்னையடைந் தோர்க்கு. (8[16)

பகலிரவு ஒவ்வொன்றும் பத்துநூ றூழியாம்
நிகரிலா பிர்ம நாள் ஒன்று (8[17)

பகலில்அண் டங்கள் பலவும்தோன் றிப்பின்
நகர்ந்து ஒடுங்கும் இரவு. (8[18)

பல்லுயிர் பாரினில் தோன்றி மறைவது
எல்லையின் றித்தொடர்வ தொன்று. (8[19)

மறையும் உலகினுக்கு மேலாக என்றும்
மறையா உலகமொன்று உண்டு. (8[20)

கரந்தும் அழிவற்றும் நிற்கும் கதியே
பரமபதம் என்பதாம் மற்று. (8[21)

அனன்யநிலை மாறிலா பக்தியே யாகும்;
அனன்யமே முக்தி தரும். (8[22)

ஞானிகட்கு முக்திபிறப் பைத்தேர்ந்து நல்கும்நாள்
நானிங்கு கூறுகிறேன் கேள் (8[23)

உத்ராய ணத்தில் வளர்பிறை ஒன்றும்நாள்
உத்தம யோகியர் அன்று. (8[24)

பகற்பொழுது தீபம்படர்ந்த ஒளியில்
அகவுயிர்நீங் கினோர்பிற வார் (8[24)

தட்சணா யத்தேய் பிறைஇரவு சார்புகையில்
பட்ட வுயிர்பிறக்கும் மீண்டு. (8[25)

இவ்வொளி மற்றும் இருள்வழிகள் எப்பொழுது
அவ்வகை நல்கும் பயன். (8[26)

இவ்வழிகள் நன்குணர்ந்தோர் என்றும் மயங்காது
செவ்வழியைத் தேர்ந்திடுவர் ஆய்ந்து (8[27)

இதையுணர்ந்த யோகிகள் ஏற்றதவம் வேள்வி
யதைநீக்கிச்சென் றடைவர் வீடு. (8[28)

# பிராணாயாமம் பிரவேசம்

திருமதி ஜி. கமலா, பி.எஸ்.சி.,

''கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேல் எழுப்பில் தேகம் விழுமோ பராபரமே''!

—தாயுமான சுவாமிகள்.

எண்ணரிய பிறவிகளில் அரிதானது மானிடப் பிறவி. காரணம் இப்பிறவியில்தான் ஞானம் பெற்று சிவபதம் இணையலாம். ஞானம் பெற மனோலயம் பெற வேண்டும். மனோலயத்தால் பிராணலயமாகும்.

பிராணன் மனித வாழ்விற்கு இன்றியமையாதது. உணவின்றி பன்னாட்கள் வாழலாம். நீர் இன்றி ஒரு வாரம் வாழலாம். ஆனால் பிராணன் இன்றி ஒரு நொடியும் வாழ முடியாது. இப்பிராணனைத் தாயுமான சுவாமிகள் 'கால்' என்ற பதத்தால் குறிக்கிறார். கால், காற்று என்னும் பொருளது. வாயு என்றும் பகர்வர். வாயுக்கள் பத்து. அவை முறையே பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், கூர்மன், நாகன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்பன. இவற்றுள் தலைமை வாயு பிராணன்.

தலைமை வாயுவான பிராணனைப் பந்தனம் செய்ய அட்டமா சித்திகளைக் கைவரப் பெறலாம். விளக்கமாக, மனிதன் நாள்தோறும் பன்னிரண்டு அங்குல அளவில் மூச்சு விடுகின்றான். இவ்வாறு ஒரு நாளைக்கு 21,600 மூச்சுகள் செலவழிகின்றன. இம்மூச்சுக்களைச் செலவழிக்காமல் சேமிக்கும், சேமிக்கப் பழகும் பயிற்சியே பிராணாயாமம். பிராணாயாம பயிற்சியின்போது பிராணனை இடகலையில் இழுத்து சற்று ஆக்ஞையில் (புருவ மத்திம இடம்) நிறுத்திப் பின் பிங்கலை வழியே வெளியிட வேண்டும். சற்று நேரத்திற்குப் பின் பிங்கலை வழியே பிராணனை இழுத்து முன்போல் நிறுத்தி இடகலையில் வெளியிட வேண்டும். இவ்வாறு வாசுகி என்னும் பாம்பு கொண்டு மந்திர மலையைக் கடைந்து தேவாமிர்தம் கடைவதுபோல உள்ளிழுத்து வெளியிட வேண்டும். இதனை அருளாளர்,

''ஏற்றம் இரண்டுள; ஏழு கிணறுள''

என்பர். அதாவது இரண்டு மூச்சுக்களைஏற்றம் இறைப்பது போல ஏழு யோக பூமிகளுக்குச் செலுத்த வேண்டும். ஏழு யோக பூமிகளே இங்கு ஏழு கிணறுகளாக உருவகிக்கப்படுகின்றன. அவை முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுப்தி, ஆக்ஞை எனும் ஆறு ஆதாரங்களும் அதனைக் கடந்த பிரம்ம சகஸ்ரகாரமுபாம்.

இவ்வாறாக புரியும் பிராணாயாமத்தால் பத்து வாயுக்களுக் கும்முதன்மையான பிராணனும் அபானனும் சுழிமுனை நாடியின் கீழ்ப் பாகத்திலுள்ள துளையின் வழியாக அந்நாடியைத் தொடும். சுழிமுனை நாடியை 'ஆந்திர வேட்டிகை' என்றும் புரிதத்துவ நாடி என்றும் கூறலாம். இந்நாடி நூறு நாடிகளின் நடுவே பொருந்தி நிற்கும். இவ்வொப்பற்ற நாடி வீணையின் அங்கத்திலுள்ள விர்த்தத்தைப் போலவும் (சுரஸ்தானங்கள்) நீர்ச் சுழியைப் போலவும் அந்நாடி முழுவதும் நிலைப்பெற்றிருக்கும். இது குளிர்ச்சியின் வருத்தத்தால் நித்திரை செய்யும் பாம்பின் அங்கத்தைப் போலக் கெட்டியாக வளைந்து சதாகாலமும் பிராண வாயுவால் நிலையாய் இருக்கும். இந்நாடி வளைந்து சதாகாலமும் பிராண வாயுவால் நிலையாய் இருக்கும். இந்நாடி வாழையின் மலரைப் போன்று மிருதுவானது. இது முதுகெலும்பின் மூலாதாரப் பகுதியிலிருந்து தொடர்ந்து புருவ மத்திமத்தில் முடிவுறுகிறது. இந்தச் சுழிமுனை நாடியில்தான் குண்டலினி சக்தியானது, குற்றமற்ற மேலானதாய், பரிசுத்தமாய் காணப்படும். இச்சக்தி, சக்திகள் அனைத்திற்கும் வெற்றியைக் கொடுக்கும்.

குண்டலினி சக்தி பொருந்தி நின்ற சுழிமுனை நாடியைப் பிராணனும் அபானனும் தொட்டமாத்திரமே பாம்பின் வாலைத் தொட்டவுடன் அது சீறி எழுவது போல அதனின்று மூலாக்கினி எனும் சக்தி எழும்புகிறது. இதனை மூலக்கனல் என்கிறார் தாயுமான சுவாமிகள். இக்கனல் சுழிமுனை நாடி முடிவுறும் இடத்தை அடைகிறது. இவ்விடம் சிந்தை பிறப்பிடமான இதயதானம். இவ்விடத்தில் மூலாக்கினியாக எழுந்த குண்டலினிச் சக்தி பொருந்தும். இச்சக்தியின் இயல்பை வசிட்டர் இராமபிரானுக்குப் போதிக்கிறார். அப்பாடல் வருமாறு :

''முனிவுறுபெண் பாம்புபோல் மூச்செறியும்
எப்போதும் முகமேலாகும்
அனிசம்(அ) சை வுக்கேது வாம் (இ) தய
கோசத்தை அடைந்தநாடி
யெனையவும்(இ ங்கு இதனிடையே கட்டு
கட்டுண்ணும் குண்டலினி இதன்பேராகும்
துனைதலுற வசைகின்ற பரிசவறிவின்
கலையால் சுத்த மாகும்''.





இப்பாடலில் வசிட்டர் குண்டலினி சக்தியின் வேகத்தைப் பெண் பாம்பின் சீற்றத்திற்கு ஒப்பிடுகிறார். பாம்புகளில் பெண் பாம்பிற்குத்தான் சீறும் குணம் அதிகம். அதன் பல்லில் விடம் உண்டு. அது யாரையும் கடிக்காமல் இருந்தால் அதன் விடமே மாணிக்கமாக மாறுகிறது. மாந்தர்களும் சிற்றின்பம்நாடாமை இன்னா செய்யாமை, பொய்யாமை, சினமின்மை போன்ற குணங்கள் பொருந்தி சாத்வீகத்தில் நின்றார்களாயின் அவர்களது விந்து உச்சிக்குச் சென்று சக்தி பொருந்திய கல்லாக மாறுகிறது. இதனை 'ஓஜஸ்' என்பர். இதனால் நீரிலிருந்து மின்சாரம் உண்டாவதுபோல இதய தானத்தில் பிராணம் நிலைப் பெற்றால் உண்டாகும் சக்தி பிரம்ம சகஸ்காரத்தை அடையும். இந்த யோகம் குண்டலினி யோகம். இவ்வாறு குண்டலினி சக்தி மேலெழுந்தால் உடல் கனம் குறைந்து இலேசாகும். பரகாய பிரவேசம் செய்ய ஏதுவாகும். அட்டமா சித்திகள் கைவரப் பெறும். எண்ணரும் புவனங்கள் தோற்றப்படும்.

இவ்வாறு சொல்லப்பட்ட குண்டலினி சக்தியைப் பூரகப் பழக்கத்தினால் பூரணஞ் செய்து பிரகாசிக்கும்படி நின்றால் மகா மேருவுக்கு ஒப்பான வலிமை உண்டாகும். சரீரம் பழுக்கும். பூரகப் பழக்கத்தினால் அறிவு மேல் நோக்கி நிற்கும் பட்சத்திலே, பிராணன் நிறைந்திருக்கின்ற பட்சத்திலே ஆகாய கமலம் செய்விக்கும். இந்நிலையில் சாதகன் குரு மொழியை உணர்வான். அத்தருணம் சுழிமுனை நாடி வழியே

''மேல்கொண்ட வாயுவும் கீழ்ப்பட மூலத்து வெந்தழலைச்
சூல்கொண்ட மேகமென ஊமை நின்று சொரிவதைஎன்
னாற்கண்ட தன்று மௌனோப தேசி அளிக்கையின்இப்
பாற்கண்டு கொண்டனன் மேலே அமிர்தம் பருகுவனே''.

—தாயுமான சுவாமிகள்

என்பதற்கிணங்க வரும் மூலாக்கினியால் சீவனைச் சூழ்ந்துள்ள உணர்வு அணுக்கள் பற்றி எரியும். இச்சோதி அகண்டு வெளியாகும். இவ்வெளி சிற்பரவெளி. சிற்பரவெளியில் (உணர்வு அணுக்களிலிருந்து) சீவன் வெளிப்படும். இச்சீவ அணு குரு மொழி பிரகாசத்துள் செல்லும். ஊசி முனை வாயிலைக் கடந்து மயிரிழை அளவுள்ள பாதை வழியே சென்று பிரம்ம சொரூபத்தை ஆனந்திக்கும்.

இவ்வாறு சிவன் சூட்சும மார்க்கத்தில் போவதால் பருமனான ஆகாயத்தில் நிறைந்து, சரீரம் அணுத்துவமும் மகத்துவமும் பெறும். ஒன்றாகியும், சின்பாத்திரமாயும், நீங்காத சமத்துவமாகியும், பரிசுத்தமாகியும் உபசாந்தமாகியும் ஒரு சம்பந்தமும் இல்லாத வஸ்துவாகியும் சூட்சுமத்தில் மிகச் சூட்சுமமாகியும் தனித்து நிலைபெற்று பிரம்மத்துடன் ஒன்றாகப் பொருந்தும். இச்சங்கற்பத்தால், சாதகன் தான் நினைத்தவாறு பிரிவாகச் செயல் புரியும் தன்மைகளை அடையலாம்.

இவ்வாறு பிரம்மானந்தம் பெற, ஏதுவான குண்டலினி இதய தானத்தில் அடக்கம் பெறுதலான நாடிகள் யாவும் இச்சக்தியினியினிடத்து உந்தப்பட்டன. இதனோடு இரேசகத்தினுடைய நிலைப் பெற்ற பிராணன் வெகு கால நிலையாய் இருக்குமாயின் பரகாய பிரவேசம் செய்யலாம்.

விளக்கமாக, குண்டலினி சக்தியானது சர்ப்பத்தைப் போல வேகமாகச் சென்று தண்டைப் போல் உயர்ந்து விரிந்து மேலே செல்லும். சரீரத்தைக் கயிற்றைப் போல பிணைந்துள்ள நாடிகள் அனைத்தும் இச்சக்தியைக் கிரகித்து மேலே கிளப்புவிக்கும். இதனால் சரீரம், வாயுவினால் நிறைந்த தோற்பையானது மடை சூழ்ந்த சலத்தின் மத்தியில் அமிழ்த்தினாலும் மேலே எழும்புகின்ற யோகத்தினால் யோகிகள் ஆகாயத்தில் சஞ்சரிப்பார்கள். இதனைக் கேசரி மார்க்கம் என்பர். எடுத்துக்காட்டாக மதுரகவி ஆழ்வார் கேசரி மார்க்கமாக சென்றபோது, மரப்பொந்தில் புகுந்து அமுத தாரையுண்டு கொண்டிருந்த நம்மாழ்வாரால் ஈர்க்கப்பட்டு அவரைச் சந்தித்து பேசியதாக வரலாறு செப்புகிறது. இசை மேதை நாரதரும் கேசரி மார்க்கமாகத்தான் திரிலோகமும் சஞ்சரித்தார் எனப் புராணம் பகர்கிறது.

இவ்வாறு கேசரி மார்க்கமாக சஞ்சரித்தலே பரகாய பிரவேசம் செய்தலாகும். பரகாய பிரவேசம் செய்பவர்கட்கு குண்டலினி சக்தியானது கழிமுனைக்கும் சென்று பிரம்ம அந்தரத்தில் மேலாகப் புறப்பட்டு, பொருந்தியிருந்ததற்கு மேல் பன்னிரண்டு அங்குலத்தினது அளவுடையதாய் இருக்கும். எனவே இவர்கள் ஆகாயத்தில் சஞ்சரிக்க ஏதுவான சக்தியைப் பெறுகிறார்கள்.

# படிப்பும் பண்பாடும்

படித்ததின் பிரயோஜனம் நல்ல குணம், அடக்கம். இப்போது நாட்டில் முன்னைவிட நிறைய படிப்பு இருக்கிறது. ஹைஸ்கூலில் இடம் இல்லாமல் 'ஷிப்டு' வைத்து வகுப்பு நடத்துகிறார்கள். இவ்வளவு இருந்தும் படிப்பின் பிரயோஜனமான பண்பாடு ஏன் வளரவில்லை.



—தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள்



# பாவப் பதிவுகளும் போக்கும் வழிகளும்


**யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி**

தலைவர், உலக சமுதாய சேவா சங்கம், சென்னை-41.


மனம், மொழி, செயல் என்ற மூன்று வழிகளில் நாம் செயலாற்றி வாழ்கிறோம். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. இது தெய்வீக ஒழுங்கமைப்பு. மனம் மொழி செயல் என்ற மூன்று செயல்களுக்கும் நான்குஇணைப்பு விளைவு உண்டு. அவை: பதிவு, பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்ப துன்ப விளைவுகள் என்பனவாகும். செயல் பதிவுகளுக்கும் தொடர் இயக்கங்களுக்கும், களங்களாகப் புலன்கள், மூளை, வித்து, உடல், உலகு பேரியக்க மண்டலம் ஆகியவை அமைகின்றன.

ஒருவர் ஒரு திருவிழாவிற்குப் போக வேண்டுமென்று எண்ணுகிறார். அந்த எண்ணத்தில் ஒரு ஊர், அங்கு போகும் செயல், அங்கு காணவிழையும் காட்சிகள் அனைத்தும் அகக்காட்சியாகின்றன. இவ்வாறு புற மனத்தால் ஒரு எண்ணம் உருவாகும்போது அதற்கு வேண்டிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகிய எழுச்சிகள், உயிராற்றலின் இயக்க அலைகள் வாயிலாக ஏற்படுகின்றன. உயிராற்றலை, மூளையின் சிற்றறைகளில் எத்தனை கோடி இணைந்து அழுத்தம், ஒலி, ஒளி, சுவை மணம் இவையாக மாற்ற முடியுமோ, அத்தனையும் இணைந்து இயங்கிய ஓர் எண்ணத்தில் அகக்காட்சி உருவாகின்றது. இவ்வாறு மூளையில் ஏற்படும் பதிவுகளும் பிரதிபலிப்புகளும் நடுமனமாகும். மேலும் இந்தப் பதிவுகள் வித்தணுக்களில் மரபுப் பதிவாகப் பதிவு பெறுகின்றது. இதுவே அடிமனமாகும். இந்த இயக்கத்தின் தொடராக உடலில் உயிராற்றல்'அதிர்வு அலை இயக்கம் வேறுபட்டு உடல் முழுவதும் உள்ள அணு அடுக்குகளில் பதிவுகள் உண்டாகின்றன. அதுமட்டுமல்ல. ஒருவர் ஓர் எண்ணம் எண்ணினால் அது பிரபஞ்ச சமஷ்டி உயிரோடு தொடர்பு கொண்டு எண்ணிறந்த மக்கள் மூளையிலும் பதிவாவதோடு பிரபஞ்ச உயிரில் நிரந்தரப் பதிவாகவும் ஆகிவிடுகிறது. இவ்வாறு ஒரு தடவை ஒருவர் எண்ணும் எண்ணத்தால் ஏற்படும் உணர்வு உடல், மூளை, தன்னுயிர், பிறஉயிர், சமஷ்டி உயிர் பதிவுகள் திரும்பத் திரும்பப் பிரதிபலிப்பாகும்போது எண்ணம் தோன்றிய இடத்திலேயே அதிக அழுத்தமாகச் செயலாவது இயல்பு. சமுதாயத்தைப் பற்றியோ தனிப்பட்ட பிறரைப் பற்றியோ எண்ணும் எண்ணங்கள் உரியவரிடம் அதிக அழுத்தமாகத் திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும்.

பல தடவை திருவிழாவிற்குப் போக வேண்டுமென்ற எண்ணம் பிரதிபலிக்கும்போது எண்ணத்திற்குச் செயலாற்றவல்ல போதிய வலிமை ஏற்பட்டுவிடும்.

இந்த எண்ணத்தால் ஏற்பட்ட உயிராற்றல் விரைவு அதிர்வு அலைகள் உடல் கருவிகளையெல்லாம் ஊக்கி எண்ணத்தைச் செயலாற்றத் தயார் நிலையை ஏற்படுத்திவிடும். பிறகு திருவிழாவிற்குப் போய்ப் பார்த்துக் களிக்கும் செயல் மலர்கின்றது. அதனாலே இன்பதுன்ப அனுபவங்கள் பதிவாகின்றன. இவ்வாறு செயலாகப் பதிந்த எண்ணமும் செயலும் தேவையாக, பழக்கமாக, சூழ்நிலைக் கவர்ச்சியாக மாறி, அடிக்கடி மனிதனைச் செயல்படுத்துகின்றது. இந்த விளக்கத்தைக் கொண்டு ஓர் எண்ணம் எவ்வாறு பதிவு, பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்ப துன்ப விளைவுகள் என்ற நான்காக மாற்றம் பெறுகிறது என்பதை நன்குணரலாம்.

இது போன்றே நாம் பேசும் பேச்சுக்களும் பதிவாகின்றன. நாவில் இயக்கப் பதிவாக, உடல் முழுவதும் ஒலி அலை அதிர்வுப் பதிவாக, மூளையில் நினைவுப் பதிவாக, வித்தில் தரப்பதிவாக, பிரபஞ்ச உயிரிலும், பிற உயிர்களிலும் பிரதிபலிப்புப்பதிவாக அமைகின்றன. ஏழெட்டு என்னும்போது ஐம்பத்து ஆறு என்று ஒரு கணித ஒலி நாவில் தொடர்ந்து வருகின்றது. இதுவே நாவின் இயக்கப்பதிவு. ஒவ்வொரு எழுத்து உச்சரிப்பிலும் ஒலி அலை நீளமும் தாக்குதல் ஆற்றலும் வேறுபட்டு அதற்கேற்ப உடல் கருவிகளில் நரம்பு மண்டலங்களில், அதிர்ச்சிப் பதிவுகள் ஏற்படுகின்றன.

இதேபோன்று ஒவ்வொரு செயலிலும் புலன்கள், உடற்கருவிகள், மூளை, வித்து ஆகிய இடங்களில் பதிவுகள் ஏற்படுகின்றன.

### ஆகாமிய கர்மம்:

இத்தகைய மனம் பொழி செயல் ஆற்றல் கள் உடற்கருவிகளாகிய புலன்கள், உறுப்புகள் இவற்றில் பதிவாகி திரும்பவும் உயிருக்கு ஊக்கமூட்டி செயல்படுத்தும் விதியை ஆகாமிய கர்மம் என்று வழங்குகிறோம்.

### பிராரப்த கர்மம்:

மூளையில் பதிவு பெற்றுத் திரும்ப அது ஆன்மா வுக்கு நினைவூட்டிச் செயலாக பாற்றும் விதியை பிராரப்த கர்மம் என்று கூறுகிறோம்.

### சஞ்சிதகர்மம்:

வித்தில் பதிவாகித் தனக்கும் தன் மூலம் பிறக்கும் பிற்காலக் குழந்தைகளுக்கும் அறிவு, ஒழுக்கத் தரங்களாக அமையும் விதியைச் சஞ்சிதகர்மம் என்று கருதுகிறோம்.

இத்தகைய பதிவுகளில் நன்மையே பயக் கும் செயல்களைத் தவிர தீமை பயக்கும் செயல்களைப் பாவம் என்று வழங்குகிறோம். பாவச் செயல் பதிவுகளுக்கு இடமளித்தால் அவை திரும்பத் திரும்பப் பிரதிபலிப்பாகி செயல்களாக விளைந்து தனக்கும் பிறர்க்கும் வாழ்வில் துன்பத்தை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய வினைப் பயனைத் தீர்க்க முடியுமா? முடியாதா? என்ற சிந்தனை பெரும் பாலோருக்கு எழுவது இயல்பு. செயல் மூலம் பதிந்த பதிவுளை மாற்றுச் செயல் மூலம் ஏன் களைய முடியாது? முதலில் விழிப்புநிலை மன உறுதி, இவற்றிற்குப் பயிற்சி செய்து கொள்ள வெண்டும். பிறகு பிராயச்சித்தம் மாற்றுச் செயல் மூலம் பதிவு அழித்தல், சமப் படுத்துதல் என்ற மூன்று முறைகளைக் கையாள்வது மூலம், எல்லாப் பழிச் செயல் பதிவுகளையும் போக்கி மனத் தூய்மையும் வினைத் தூய்மையும் பெறலாம். ஆனால், இவையெல்லாம் சாதனை மூலம் பெற வேண் டியவையாகும். உரிய கால நீளமும் வேண்டும். பொறுமையோடு கூடிய தெளிந்த அறிவின் முயற்சியும் வேண்டும்.

முறையாகக் குண்டலினி யோகமோ அல்லது வேறு ஒரு தியான முறையோ பழகி னால் மனவலிவும் விழிப்பு நிலையும் ஏற்படும். அதன் பிறகு அன்றாட வாழ்வில் நமது மனம், மொழி, செயல்களை நலம் தரும் முறையில் திட்ட மிட்ட வாறு செயல்படுத்திச் பாவப்பதிவு களை நீக்கிக் கொள்ளலாம்.

இப்போது பாவச் செயல் பதிவுகளை எவ் வாறு மூன்று வழிகளில் அகற்றிக் கொள்வது என்பதைப் புரிந்து கொண்டு அவ்வாறே ஆற்றி நலங் காண்போம்.

### பிராயச்சித்தம்:

ஒரு கூட்டத்தில் வழியில் ஒருவர் அமர்ந் திருக்கிறார். ஒருவர் அவ்வழியே போகும் போது உட்கார்ந்திருப்பவர் மீது கால்பட்டு விடுகிறது. இதை அவருக்கேற்பட்ட அவமான மாகக் கருதி வருந்துகிறார். உடனே மிதித்து விட்டவர் ''தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்'' என்று சொல்லி மிதிபட்டவர் காலைத் தொட்டுக் கும்பிடுகிறார். இது போன்றுதான் தவறு செய்ததை உணர்ந்து வருந்தி தவற்றால் துனபுறுவோர்க்கு ஆறுதல் கூறியோ அலலது இழப்பீடு செலுத்தியோ நிறைவு பெறும் செயல்தான் பிராயச் சித்த மாகும். அளவுக்கு மீறி உணவை ஒருவர் அருந்தி விட்டார். மந்தப்பட்டு விட்டது. அதை உணர்ந்து அடுத்த வேளை உணவை யொழித்துப் பட்டினி கிடப்பதுகூட பிராயச் சித்தம்தான். இந்த முறையில் சில பழிச்செயல் பதிவுகளை மாற்றியும் நீக்கியும் தூய்மையுப் நிறைவும் பெறலாம்.

### உணர்ந்து திருத்தி அழித்தல்:

சில தவறான செயல்களைச் செய்து அதன் விளைவாகச் சில நோய்கள் உடலில் தோன்றி விட்டன. பத்தியத்தோடு மருந்து உண்டோ, அல்லது முறையான உடற்பயிற்சி யின் மூலமோ அந்த நோயை நீக்கி நலம் பெறு தல்தான் உணர்ந்து திருந்திப் பாவச் செயல களை அழித்தலாகும். இதே போன்று நினை வலைகளாகப் பதிவு பெற்ற பழிச் செயல் பதிவுகளையும் உணர்ந்து, திருந்தி, மாற்று எண்ணங்களைப பதிவு செய்து, செயல்திருத் தம் பெற்று வாழ்வதன் மூலம் பாவச் செயல்கள் சிலவற்றைப் போக்கிக் கொள்ளலாம். பதிவு களில் பேராசை, சினம் முதலிய ஆறு குணங்கள் கூடப் பழிச் செயல்கள் மூலம் பதிவு பெற் றவையே. இவற்றையும் நாம் மெய்விளக்கத் தவமுறையில் அறுகுணச் சீரமைப்பு எனும் பயிற்சி மூலம் ஒழுங்குபடுத்துகின்றோ மல்லவா? இவை எல்லாம் உணர்ந்து திருந்திப் பழிச் செயல் பதிவழித்தல் என்ற முறையின் கீழ் வரும்.

### பழிச்செயல் பதிவுமுறிவு அல்லது சமன்செய்தல்:

அகநோக்குப் பயிற்சி மூலம் மனத்தை உயிரில் ஒடுக்கி உயிர்நிலையறிந்து, ஆன்ம உணர்வு முதலில் பெற வேண்டும். இந்த நிலையில் மெய்ப்பொருளே சீவனாகி புலன் களில் கட்டுண்டு இன்பதுன்ப உணர்வுகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் உண்மை உணர்வாகும். இந்த உணர்வு பெற்ற பின், மனம் உடல் நிலை கடந்து, உயிர்நிலையில் நிலைத்துப் பின், உயிர் நிலையும் தாண்டித் தெய்வ நிலையில் ஒன்றி நிற்கும் உயர்பேறு கிடைக்கும். செயல்கள் எல்லாம் கடமை உணர்வின் கீழ் எல்லோருக்கும் பயனாகும். அறிவோ தூய்மையான மெய்ப் பொருளோடு ஒன்றி நிற்கும்.

இங்குப் பழிச் செயல் பதிவுகளும் புதிதாகத் தோன்றா. முன் இருந்த பதிவுகள் யாவும் அடியுடன் முறிந்து போகும். இந்த உண்மையினைத்தான் வள்ளுவர்

''இருள்சேர் இருவினையும்
சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

என்று விளக்குகிறார்.

இக்கட்டுரையின் வாயிலாக நாம் விளங்கிக் கொள்வன யாவை?

(1) தனக்கோ பிறர்க்கோ துன்பம் தரும் செயல்கள் பாவச் செயல்களாகும்.''

(2) மனம், மொழி, செயல் எதுவாயினும் ஒவ்வொன்றுக்குமே உடலிலும் உயிரிலும் பதிவுகள் உண்டு.

(3) வினைகளின் தன்மைகளுக்கும் விளைவுகளுக்கும் ஏற்ப அவை ஆகாமியம், பிராரப்தம், சஞ்சிதம் என்னும் மூன்று விதப் பழிச் செயல் பதிவுகளாக

(அ) உறுப்புப்புலன்களிலும்,

(ஆ) மூளையிலும்

(இ) வித்திலும் பதிவாகின்றன.

இவையனைத்தும் ஆன்மாவின் சூக்குமப் பதிவுகளாகிப் பிறவித் தொடராக மனிதனுக்கு துன்பங்களை அளிக்கின்றன,

(4) விழிப்புநிலை பெறவும் மன வலிவு பெறவும் ஏற்ற உளப் பயிற்சி ஏற்று எல்லாப் பழிச் செயல்களையும் பிராயச் சித்தம், உணர்ந்து திருந்தி அழித்தல், தெய்வநிலைத் தெளிவால் முறித்தல் என்ற மூவகையில் போக்கி வினைத் தூய்மையும் மனத் தூய்மையும் பெறலாம் என்பதேயாகும்.

எந்தப் பழிச் செயலானாலும் அத்தகைய செயல்களைச் செய்யாதிருக்கும் வழியில் முடிவு கண்ட பின்னர்தான், மனவலிவுபெற்ற பின்னர்தான், பிறகு அதை முயற்சியால் முறையாகப் போக்கி நலங் காணலாம் என்பதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். ஓங்குக ஒழுக்க உணர்வு.

# கோவிலால் சமுதாய ஒற்றுமை!



கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டா என்பது பழமொழி. சிறிய கிராமமாக இருந்தாலும், பெரிய நகரமாக இருந்தாலும், கோயில்கள் தமிழ்நாட்டில் மண்டிக் கிடக்கின்றன. நம்முடைய சமுதாய வழக்கில் கோயில் ஒன்றுதான் எல்லோரும் நாடிச் செல்லும் இடமாகவும், கூடித் தங்களுடைய சமுதாய உணர்வை வெளிப்படுத்தும் இடமாகவும் இருக்கிறது. மாமன்னர்களின் புகழைப்பரப்பும் சிகரங்களாக அக்கோயிலைப் பார்க்காமல் சமுதாய உணர்வின் ஒட்டு மொத்தமான எழுச்சியின், திறமையின் சின்னமாகவே அக் கலைக் கூடங்கள் இன்றும் நமக்குக் காட்சியளிக்கின்றன.

**—நம் ஆணையாளர் திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ். அவர்களின் 'என் உறவினருக்காக'' என்ற நூலிலிருந்து....**




கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்** (21)

ஒரு சமயம் சிவபெருமான் கையிலை மலையில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து உமாதேவியாருடன் போக குருமூர்த்தியாய் சிவகணங்களுடன் வீற்றிருந்தபோது, முருகப் பெருமானுக்குப் பால் கொடுத்த கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரும் சிவத்தவ வேடங் கொண்டு பெருமானை அணுகித் தமக்கு அட்டமா சித்தி அருளுமாறு வேண்டினர். தன் அருகில் இருக்கும் அம்மையிடம் அட்டமா சித்திகள் எட்டும் சேடிகள் உருவம் கொண்டு சேவை செய்யக் கூடியவைகளாதலின், அவளை வணங்கினால் அட்டமாசித்தி கிடைக்குமெனக் கூறி, அட்டமாசித்திகளின் விவரங்களை விளக்கிக்கூற, விதி வசத்தால் அவர்கள் அவற்றை உடனே மறந்தனர். அது கண்டு சீறிய இறைவன் 'நீங்கள் அறுவரும் பட்ட மங்கை என்னும் ஊரில் அஞ்ஞானப்பாறைகளாகிக் கிடப்பீர்கள்'' எனச் சாபமிட்டார். மன்னிப்பு வேண்டிய அவர்களைக் கண்டு மனமிரங்கிய இறைவன் ''மதுரையிலிருந்து நான் நேரில் வந்து, கல்லுருவத்தை நீக்கி, அட்டமா சித்திகளை உபதேசிக்கிறேன்' எனக்கூற, அவர்கள் பட்ட மங்கையில் பாறைகளாகிக் கிடந்தனர்.

ஆயிர வருடங்கள் கழித்து இறைவன் பட்டமங்கை என்னும் ஊருக்கு, குருவடிவம் கொண்டு எழுந்தருளி, அவர்களுக்கு முன்னை உருக்கொடுத்து எழுப்பி, தனது திருவடிகளால் அவர்களைத் தீண்டித் திருவடி தீட்சை செய்தருளி, அட்டமாசித்தி பற்றி உபதேசித்தார்.

''அணிமா; மகிமா; லகிமா; அரிய கரிமா;
பிராத்தி; மலப்
பிணிமா சுடையோர்க்கு அடைவாயபிராகாமிய
ஈசத்வம்; மெய்
துணிமா யோகர்க்கு எளிய வசித்துவம்;
என்றெட்டாம் இவை
மணிமா சறுத்தோர் விளையாட்டின் வகையாம்
அவற்றின் மரபுரைப்பாம்''

சிறு உயிர்களுக்குள்ளும் தான் அணுவாகச் சென்று வசிக்கும் தன்மை அணிமா என்பர். எல்லாவற்றிலும் பூராவும் அகலாது உள்ளும் புறமும் பரந்து வசிப்பது மகிமா என்பர். மிகவும் கனமாக இருப்பதை எடுத்தால் எளிதாகத் தூக்கும் சக்தியை இலகிமா என்பர். இராமாயணத்தில் அனுமான் சஞ்சீவிமலையை ஒரு கையால் எடுத்தது இந்தச்சக்தியால் என்பர். மிகவும் லேசாக இருக்கும் ஒன்றை எடுக்க முடியாமல் கனத்துக் கொள்ளும் சக்தியை கரிமா என்பர். இராவணன் அங்கதனை எடுக்க வந்தபோது கனமாக மாறிய தன்மை இந்த சக்தியால் என்பர். பாதாளத்திலிருந்து பிரம்ம லோகத்திற்குப் பிரமலோகத்திலிருந்து மீண்டும் பாதாளத்திற்கும் வரும் சக்தியை பிராத்தி என்பர். வேறு உடலில் செல்லுதல் விண்ணில் சஞ்சரித்தல் முதலானவற்றை பிராகாமியம் என்பர். திருமூலர், அருணகிரி நாதர் முதலானோர் வேறு உடலில் தம் உயிரைப் பாய்ச்சிய சக்தியையே இவ்வாறு கூறுவர். படைத்தல், காத்தல், அழித்தல், நவகிரகங்களை அடக்கியாளுதல் போன்ற சக்தியை ஈசத்துவம் என்பர். உலகிலுள்ள சகலரையும் தம் வசப் படுத்துதல வசித்துவம் என்பர்.

''எம்மை யுணர்ந்த யோகியர் இவற்றை விரும்பார். ஆனால் இவை தாமாகவே அவரை யடைந்து உலகிற்கு யோகிகளின் பெருமையைத் தெரியப்படுத்தும்'' என்று கூறினார் இறைவன்.

''எம்மை உணர்ந்த யோகியர் இவற்றை
விரும்பார் எனினும் அவர்
தம்மை நிழல்போலடைந்து உலகர்க்கு
அனையார் பெருமையை உணர்த்தும்
செம்மையுடைய இவை என்னச் சித்தி எட்டும்
தெளிவித்து
கொம்மை முலையார் அறுவருக்குப்
கொளுத்தினான் எண்குணச் செல்வன்''

அட்டமாசித்தி பெற்று அடங்கிய பெரியோர்கள் இன்றும் உள்ளனர். சிலர் இச்சக்திகளை வெளிப்படக் காட்டிப் பெரிய யோகிகள் எனப் பெயர் பெற ஆசைப்பட்டு அத்துடன் மேல் நிலையடையாது நின்று விடுகின்றனர். இறைவனது அருள் எல்லாச் சக்திகளையும் மீறியதன்றோ?

உபதேசம் பெற்ற கார்த்திகைப் பெண்கள் அறுவரும் கைலையை அடைந்தனர்.

காஞ்சிபுரத்தில் காடுவெட்டிய சோழன் என்றொரு மன்னன், காஞ்சியைச் சுற்றியுள்ள காடுகளை வெட்டி நகரமாகச் செய்தமையால் காடு வெட்டிய சோழன் எனப் பெயர் பெற்றான். மதுரை நாயகனாக சோமசுந்தரப் பெருமானை நாளும் வணங்க எண்ணித் தன் விருப்பம் நிறை வேறாது என மனம் வருந்தினன். ஒரு தினம் சோமசுந்தரப் பெருமான் அவனது கனவில் தோன்றி 'இன்று இரவு மாறு வேடம் பூண்டு மதுரைக்கு வந்து என்னைத் தரிசிப்பாயாக' எனக்கூறி மறைந்தார். இறைவனது உத்திரவைக் கேட்டு மகிழ்ச்சி கொண்ட சோழன், அன்றிரவே மாறு வேடம் பூண்டு பக்தி என்னும் குதிரையேறி, இறைவனது ஐந்தெழுத்தான பஞ்சாட்சரத்தையே துணையாகக் கொண்டு மதுரை வந்தனன். மதுரையை அடைந்தபோது வைகை நதி வெள்ளம் பெருகி மதுரைக்குள் அவன் நுழையாது தடுத்தது. கலம் நிறையச் சோறு பரிமாறிச் சாப்பிட ஆரம்பிக்கும்போது ஒருவர் தடுத்தால் எவ்வாறிருக்கும்? ''பகல் வேளை

# தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம்-1972

தொல்பொருள் பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி திருக்கோயில்கள், மடங்கள், பரம்பரை அறங்காவலர்கள் தங்கள் ஆளுகையின் கீழ்உள்ள கோயில்களில் உள்ள செப்புத்திருமேனிகள், செப்பேடுகள், தந்தச் சிற்பங்கள், மரச் சிற்பங்கள், இதர கலைப்பொருட்கள் ஆகியவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டியது அவசியம். இதுவரைப் பதிவு செய்துகொள்ளாத திருக்கோயில்கள் தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் பதிவு அலுவலர் அலுவலகங்களில் [சென்னை, திருநெல்வேலி, திருச்சி, சிதம்பரம்] பதிவு செய்துகொள்ள உடன் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

**ஆணையர்,**

*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,*

### பதிவு அலுவலர் முகவரி

| | | |
|---|---|---|
| 1. | திரு. மா. சந்திரமூர்த்தி,<br>தொல்பொருள் ஆய்வுத்துறை,<br>தரமணி, சென்னை—113. | சென்னை, செங்கை எம்.ஜி.ஆர். வடார்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், தர்மபுரி மாவட்டங்கள். |
| 2. | திரு. எஸ். ஹரிஹரன்,<br>83, தெற்கு பஜார்,<br>பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி. | நெல்லை கட்டபொம்மன், கன்னியாகுமரி, சிதம்பரனார், காமராஜர், பசும்பொன் தேவர் திருமகன், மதுரை, திண்டுக்கல் அண்ணா மாவட்டங்கள். |
| 3. | திரு. கி. ஸ்ரீதரன்,<br>14, அனிபா காலனி,<br>5, டோல் கேட், திருச்சி-20. | திருச்சி, பெரியார், சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். |
| 4. | திரு. கா. குழந்தைவேலன்,<br>176, ஓ. எஸ். தீன்பில்டிங்,<br>மேற்கு வீதி, சிதம்பரம். | தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள், பாண்டிச்சேரி மாநிலம். |



யில் வந்தால் பாண்டியன் துன்புறுத்துவானே! பாண்டியன் தான் எனக்குப் பகை என எண்ணி னேன். வைகை நதியும் பகையாகி விட்டதே!'' என வருந்தினான்.

''இழுதொடுஞ் சுவை அமுது பொற்கலன்
இட்டு உணா திருகணர்
வழியவந்து விலக்குவாரின் வளைந்தது ஆறு;
பகற்செயும்
பொழுதெழும்பொழுதே மறுக்கம் விளைக்குமே
இகல் பூழியன்
வழியன்றியும் வைகையும் பகையானதே என
வருந்தினான்.''

வெள்ளம் பெருகி வந்தது கண்டு வேதனை கொண்ட சோழனைக் கண்டு இரங் கிய பெருமான், கனவில் தோன்றிய சித்த வேடத்திலேயே நேரில் வந்து வெள்ளம் வற்றும்படி நோக்கினார். வெள்ளம் வற்ற, அந்த நள்ளிரவிலேயே சோழனை அழைத்துச சென்று, தனது கோயில் வடக்கு வாசலைத் திறந்து, உள்ளே அழைத்துச் சென்று, பொற்றாமரையில் நீராடச் செய்து, மீனாட்சியம்மையைத் தரிசனம் செய்யச் சொல்லி தம்மை தானும் தரிசனம் [illegible]து அருளி, மகிழ்ச்சியூட்டினார். [illegible]ணிய பொருளை எல்லாம் எனக்கு அளித்த பெருமானே! இதற்கு முன் நான் எடுத்த உடல்களெல்லாம் பாவபுண்ணியங் களின் பொருட்டே! உமது திருவருளுக்கு ஆளாகி உம்மைத் தரிசித்த இந்த உடல் ஒன்று தான் எனக்கு உடலாயிற்று'' என மனமுருகித் தோத்திரம் செய்தான்.

'எவ்வுடல் எடுத்தேன் மேனாள் எண்ணிலாப்
பிறவி தோறும்
அவ்வுடல் எல்லாம் பாவம் அறம் பொருட்டாக
அன்றோ?
தெவ்வுடல் பொடித்தாய்! உன்றன் சேவடிக்
கடிபை பூண்ட
இவ்வுடல் ஒன்றேயன்றோ எனக்கு உடல்'
ஆனதையா?'.

என்றெல்லாம் வணங்கி வழிபட்ட சோழனை ''மன்ன! நீ இங்குவந்தது அறிந்தால் பாண்டியன் உன்னைத் துன்புறுத்துவான். உடனே புறப்படுக'' எனக்கூறிய சோம சுந்தரப் பெருமான் அவனை வடக்கு வாசல் வழியாக அழைத்து வந்து திருநீறிட்டு அனுப்பி விட்டு மீண்டும் மதுரை புகுந்து வடக்கு வாசலைப் பூட்டி ரிஷப முத்திரையிட்டுக் காப்புச் செய்து விட்டுக் கோயிலுள் புகுந்தார்.

பொழுது விடிந்தது. காவலாளிகள் மற்ற வாசல்களை திறந்து விட்டு வடக்கு வாசலைத் திறக்க வந்தபோது மீன்முத்திரை மாறி ரிஷப முத்திரையிட்டிருப்பது கண்டு பயமும் வியப்பு மடைந்து அரசனிடம் கூறினர். அரசன் அது கேட்டு வருந்தி அன்று பூராவும் உணவருந்தாமல் இரவு உறங்கும்போது, அவனது கனவில் இறைவன் தோன்றி ''பாண்டிய! உன் எதிரியான காடு வெட்டிய சோழன் நமது பக்தன். நம்மை வழிபட விரும்பினான். அவனை வடக்கு வாசல் வழியாக அழைத்துத் தரிசனம் அளித்து நமது ரிஷப முத்திரையை நாமே இட்டோம்.''

''வந்து நம்மை வழிபட வேண்டினான்
இந்த வாயில் திறந்து அழைத்து இன்னருள்
தந்து மீளவிடுத்துப்பின் தாட்கொளீஇ
நந்த மால் விடை நாம் பொறித்தேமெனா''

என்ற செய்தியைக் கேட்டு குலபூஷண பாண்டியன் இச்செய்தியையாவருக்கும் தெரிவித்தான். இறைவனது அடியவனின் விரோதம் கூடாது. அவனும் நண்பனே என்ற முறையில் பாண்டியன் சோழனுக்கு வெளிப்படையாக மதுரை நாயகனைத் தரிசிக்க அனுமதியளித்தான். சிறிது நாளில் தன் மகனான இராஜேந்திர பாண்டியனுக்கு அரசையளித்து தவம் செய்ய காடு சென்றான்.

இராஜேந்திர பாண்டியன் அரசு புரியும் காலத்தில் காடு வெட்டிய சோழன் உறவு பூண்டு அடிக்கடி பாண்டியனுக்குப் பரிசுகள் அளித்தான். பாண்டியனும் பதில் மரியாதைகள் செய்தான். பாண்டியனுடன் தனக்கு நெருங்கியஉறவு ஏற்பட்டால் அடிக்கடி சிவ தரிசனம் செய்யலாமென எண்ணிய சோழன் தன் மகளைப் பாண்டியனுக்குத் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்தான். இராஜேந்திர பாண்டியனுக்கு இராஜசிம்மன் என்று ஒரு தம்பி. அவன் அண்ணனுக்கு என்று பேசப்பட்ட சோழன் மகளைத் தானே மணந்து கொண்டான். தனது மருமகனாகிய இராஜசிம்மனுக்கு அரசு கிடைக்க வேண்டுமென்று ஆசை கொண்ட காடு வெட்டிய சோழன் பெரிய சேனையுடன் மதுரையின் மீது படை எடுத்து வந்தான். ஒற்றர்களால் இச்செய்தியை அறிந்த பாண்டியன் வருந்தி, ஆலயத்தை அடைந்து ''சோமசுந்தர நாயக! அன்று பாதி இரவில், உன் மீதுள்ள பக்தியினால் தூண்டப்பட்டு, உன்னை தரிசித்துச் சென்ற சோழன், இன்று என் மீது படை எடுத்து வந்துள்ளான். அன்று அறவழி நின்ற அவனுக்குத் துணை செய்த நீ, இன்று என்ன செய்யப் போகிறாய்? உன் திருவுள்ளம்யாதோ?'' என வணங்கி வேண்ட, 'அரசனே! நீ சோழனுடன் எதிர்த்து போர்செய். உனக்கு வெற்றி கிட்டச் செய்வேன்!'' என அசரீரியாக இறைவன் கூறினார்.

இது கேட்டு மகிழ்ச்சி யடைந்த பாண்டியன் தனது சேனையுடன் சென்று சோழனை எதிர்த்தான். இறைவனருளால் பாண்டியனது சிறிய சேனை எதிரிகளின் கண்களுக்குப் பெரிய சேனையாகத் தோன்றியது. வெகு நேரம் போருக்குப் பின்னர் நடுப்பகலில் இருவரது சேனைகளும் தாகத்தால் தவித்து வருந்தின. வெயிலின் கொடுமை தாங்கவே முடியவில்லை. இரக்கமில்லாத கொடியவர்களிடம் சென்று யாசிப்பது போல கொடுமையான வெப்பத்தை அள்ளி வீசும் கள்ளி மரத்தினடியில் நிழல் தேடிப் புகுந்தனர். தன்னைக் காட்டிலும் வறுமையுள்ளவரிடம் யாசிப்பது போல இலைகள் உதிர்த்த மரங்களினடியில் சென்று நின்றனர்.

அது போது உலகத்திற்கெல்லாம் தாய் போல் தண்ணருள் புரியும் பெருமான், நடுநிலை தவறாத நாயகனான சோமசுந்தரர், பாண்டியனின் சேனைக்கு நடுவில் ஒரு தண்ணீர்ப் பந்தலுடன் தோன்றினார். நெற்றியில் திருநீறும், காதில் மலரும், புன்சிரிப்பும் கருணையும் தோன்ற நாலு வேதங்களையே கால்களாகக் கொண்ட அத் தண்ணீர்ப் பந்தலில் ஒரு அழகிய கெண்டியில் ஒருவருக்கு ஒன்றாகவும் பலருக்கு பலவாகவும் தோன்றிய துவாரத்தின் மூலம் தண்ணீர் வார்த்துப் பாண்டியன் சேனையைத் தாகத்திலிருந்து காத்தார்.

'அருமறையகத் துள்நின்றாங்கு அருந்தவராகி
வேணிப்
பொருபுனல் பூரித்தாங்கோர் புண்ணியச் சிரகம்
தாங்கி
ஒருவருக் கொன்றேயாகி இலக்கருக்கு
இலக்கமாகி
தருகுறும் புழையால் வாக்கித் தணித்தனர்
தண்ணீர்த் தாகம்.''

தாகம் தணிந்த பாண்டியனின் சேனை, சோழனது சேனையுடன் மோதித் தோற்கடித்துச் சோழனைக் கைது செய்து பாண்டியனிடம் கொண்டு வர, பாண்டியன் சோழனை மதுரை ஆலயத்துள் கொண்டு வந்து நிறுத்த, இறைவன் ''பாண்டிய! நீ தருமம் தவறாதவன் உன் மனப்படி சோழனைத் தண்டிப்பாயாக'' என்றார்.

''அறவன் நீ யல்லையோ? உன் அகத்தினுக்கு
இயைந்த செய்க என்ற
இறைவனது அருளால் வானின்று எழுமொழி
கேட்டு வைகைத்
துறைவனும் அறத்தினாற்றால் சோழனைச்
சில்மால்யானை
வயப்பரிப்பூண் மற்றும் வழங்கினான்
விடுத்தான் பின்னர்.''

சோழனுக்குப் பரிசளித்து விடுதலை செய்து அனுப்பினான் பாண்டியன். பக்தனாயினும் குற்றம் செய்தால் தண்டனையுண்டு எனக் காட்டினான் சோம சுந்தரநாயகன்.

-தொடரும்.

# ஐந்தெழுத்து மந்திரம்!

கனகசுப்பிரமணியம்

உலகம் தோன்றும் முன்பே உண்டான ஒலி, ஒளியாகிய நாத விந்துகளிலிருந்து அகார, உகார, மகாரமாகிய அதாவது அ. உ, ம, என்ற எழுத்துக்களிலிருந்து, மூன்று மூல மந்திர ஒலிகள் தோன்றி, 'ஓம்' என்னும் பிரணவம் உண்டாயிற்று என்று நம் முன்னோர் எடுத்துக் காட்டியுள்ளனர். இதை, 'நாதவிந்து கலாதி நமோ நம, வேத மந்திர சொரூபா நமோ நம'' என்ற அருணகிரி நாதரின் திருப்புகழ் மூலம் அறியலாம்.

ஓங்காரப் பிரணவத்திலிருந்து, ஐந்துவிதச் சக்திகளுடன் கூடிய 'நமசிவாய' என்னும் பஞ்சாட்சர, அதாவது ஐந்தெழுத்து மூலமந்திர ஒலி எழுத்துக்கள் தோன்றியதாகவும் நம் முன்னோர் கூறியுள்ளனர். ஐந்தெழுத்து சூக்கும சக்திகளிலிருந்து அப்பு, தேயு, வாயு, பிருதிவி, ஆகாயம் அதாவது நீர், நெருப்பு, காற்று, நிலம், வானம் ஆகிய பஞ்சபூதச் சக்திகள் தோன்றின. இவற்றை, அவைகள் செல்லும் வழியிலேயே விட்டுவிட்டால் உலகம் அழிந்துவிடும் என்ற காரணத்தால், அவைகளை அடக்கி ஆட்சி புரிய வேண்டி ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை முறையே வகுத்து இவ்வுலகை இயக்கி வருகின்றான் இறைவன் என்பதை,

''உலகம் யாவையும் தாமுள ஆக்கிலும்
நிலை நிறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா ''விளையாட் டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!''

என்ற கம்பருடைய பாடல் உறுதிசெய்கின்றது.

தமிழகத்தில் திருவாரூர், திருவானைக்காவல், திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய திருத்தலங்கள் முறையே, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதத் தலங்களாகும்.

''நமசிவாய' என்ற பஞ்சாட்சர ஐந்தெழுத்து மூலமந்திரம், 'எல்லாம் வல்லது, என்றும் உள்ளது. எல்லார்க்கும் நல்லது, எல்லாம் உடையது, எல்லார்க்கும் என்றும் துணையாவதாகும்.'' இப்படி மலர்ந்த, உயர்ந்த, சிறந்த, 'நமசிவாய' மந்திரத்திலிருந்து உடன்பாடு எதிர்மறை என்னும் இருவித சக்திகள் உண்டாகி, அவை கீழ்க்கண்ட 96 தத்துவங்களாயின. அவை யாதெனில்:—

| | | |
|---|---|---|
| பூதங்கள் | ... | 5 |
| பொறிகள் | | 5 |
| புலன்கள் | ... | 5 |
| கன்மேந்திரியங்கள் | | 5 |
| ஞானேந்திரியங்கள் | | 5 |
| கரணங்கள் | ... | 3 |
| அறிவு | ... | 1 |
| நாடிகள் | ... | 10 |
| வாயுக்கள் | ... | 10 |
| ஆகாசங்கள் | ... | 5 |
| கோசங்கள் | ... | 5 |
| ஆதாரங்கள் | .. | 5 |
| மண்டலங்கள் | ... | 3 |
| மலங்கள் | .., | 3 |
| தோஷங்கள் | ... | 3 |
| இரட்சணைகள் | ... | 3 |
| குணங்கள் | ... | 5 |
| வினைகள் | ... | 2 |
| விகாரங்கள் | ... | 8 |
| அவஸ்தைகள் | ... | 5 |
| ஆக மொத்தம் | ... | 96 |

96 தத்துவங்களில் மிக முக்கியமான 36 தத்துவங்களின் விளக்கங்கள் யாதெனில்:—

மண், நீர், நெருப்பு, காற்று, வெளி
— பஞ்ச பூதங்கள் ... 5

நாற்றம், சுவை, ஒளி, ஊறு, ஓசை
— தன் மாத்திரைகள் ... 5

மூக்கு, நாக்கு, கண், தோல், செவி
— ஞானேந்திரியங்கள் ... 5

வாய், கை, கால், எருவாய், கருவாய்
— கன்மேந்திரியங்கள் ... 5

மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
— அந்தக் கரணங்கள் — 4

காலம், நியதி, கலை, வித்தை, அராகம்,
புருடன், மாயை— வித்தியா தத்துவங்கள் 7

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம்,
சுத்தவித்தை— சிவ தத்துவங்கள் ... 5

36

நம்முடைய உடல் 'நமசிவய' என்னும் பஞ்சாட்சர மூலமந்திர ஒலியாகிய எழுத்துக்களால் அமைந்த சூக்கும, தத்துவங்களே யாகும்' என்று சான்றோரால் உருவகம் செய்யப்பட்டு கூறப்பட்டுள்ளது. அதாவது நம்முடைய உடலில்,

''ந'' என்பது இருகால்களாகவும்
''ம'' என்பது வயிறாகவும்
''சி'' என்பது இரு தோள்களாகவும்
''வ'' என்பது வாயாகவும்
''ய'' என்பது இருகண்களாகவும்
அமைந்துள்ளது என்பர் சான்றோர்.

''நமசிவய'' என்னும் பஞ்சாட்சர ஐந்தெழுத்து மந்திரத்தை இன்னும் சற்று விளக்க வந்த சான்றோர்,

'ந' என்பது 'பிருதிவி பூத (நிலம்) தத்துவத் சத்தி என்றும், அதன் நிறம் 'பொன்மை' என்றும் அதன் வடிவம் சதுரம் என்றும் கூறுகின்றனர்.

'ம' என்பது அப்பு பூத (நீர்) தத்துவச் சத்தி என்றும், அதன் நிறம் வெண்மை என்றும், அதன் வடிவம் பிறை என்றும் கூறுகின்றனர்.

'சி' என்பது தேயு (நெருப்பு) பூத தத்துவச் சத்தி என்றும், அதன் நிறம் செம்மை என்றும் அதன் வடிவம் முக்கோணம் என்றும் விளக்குகின்றனர்.

'வ' என்பது வாயு (காற்று) பூத தத்துவச் சத்தி என்றும், அதன் நிறம் பசுமை, என்றும், அதன் வடிவம் அறுகோணம் என்றும் விளக்குகின்றனர்.

'ய' என்பது ஆகாய (வானம்) பூத தத்துவச் சத்தி என்றும் அதன் நிறம் கருமை என்றும் அதன் வடிவம் வட்டம் என்றும் விளக்குகின்றனர்.

நமது உடம்பும் ஐம்பூத மண்டலங்களின் தொகுப்பாகும். அவையாதெனில்:—

பாதம் முதல் முழங்கால்வரை 'பிருதிவி' மண்டலம்,
அதன்மேல் இடுப்புவரை 'அப்பு' மண்டலம்,
அதன்மேல் மார்புவரை 'தேயு' மண்டலம்
அதன்மேல் புருவம்வரை 'வாயு' மண்டலம்'
அதன்மேல் உச்சிவரை 'ஆகாய' மண்டலம்.

மேற்கண்ட விளக்கங்களால் 'நமசிவய' என்னும் மந்திர ஒலி இகலோக காரிய சித்திகளை நல்கும் என்றும், 'சிவயநம' என்னும் மந்திர ஒலி பரலோக காரிய சித்திகளை நல்கும் என்றும் கூறப்படுகின்றது. இம்மந்திர ஒலியை ஒரு முறை ஓதினால் இறைவன் நம் மனதில் இடங்கொள்வான் என்பதை



வீட்டு ஈயானது ஒரு சமயம் அழுகிய புண்ணின் மீதும், மறுசமயம் நிவேதனத்துக்கு வைத்திருக்கும் பொருளின் மீதும் உட்காரும். ஆனால் தாமரையிலுள்ள .தேனை அருந்தும் வண்டு அதைத்தவிர வேறொன்றையும் மதியாது. நீ வீட்டு ஈயைப் போல் இராமல் தேன் வண்டைப் போலிரு.

— இராமகிருஷ்ண பரமஹம்சர்.

''நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஓகார முதற்கொண்ட ஒருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே'' என்ற
திருமூலரின் திருமந்திரத்தின் மூலம் அறியலாம்.

பஞ்சாட்ர விளக்கம்

| எழுத்துக்கள் | பஞ்சபூதங்கள் | அதிதேவதை |
|---|---|---|
| 1. நகாரம் | பிருதிவி | பிரமன் |
| 2. மகாரம் | அப்பு | விஷ்ணு |
| 3. சிகாரம் | தேயு | சிவன் |
| 4. வகாரம் | வாயு | மகேசுவரன் |
| 5. யகாரம் | ஆகாசம் | சதாசிவம் |

ஐந்து முகங்களும் பஞ்சாட்சர விளக்கமும்

| முகங்கள் | எழுத்துகள் | சித்திகள் | உச்சரிக்க வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஈசானம் | நகரம் | உச்சாடனம் | 25 முறை |
| தத்புருஷம் | மகரம் | வித்வேஷணம் | ,, |
| அகோரம் | சிகரம் | ஸ்தம்பனம் | ,, |
| வாமம் | வகரம் | பேதனம் | ,, |
| சத்யோஜாதம் | யகரம் | மாரணம் | ,, |

இதன் மூலம் நாம் அறிவது''நமசிவய''என்னும் பஞ்சாட்சர மந்திரத்தில் சிகரம் நடுவில் உள்ளது. இரண்டு வளி என்பது வலப் புற, இடப் புற அதாவது பிங்கலை, இடைகலை மூச்சான

பிராண வாயுக்களாகும். கூடு என்பது இரேசக பூரக கும்பகம் செய்து பிராண வாயுவைச் சுழி முனையில் ஏகாக்கிரச் சித்தத்தால் நடுநிலை நாட்டி நிறுத்துவதாகும். அதன் பிறகு ''ஓம் நமசிவய'' என்னும் பஞ்சாட்சர, பிரணவ மூல மந்திரத்தை ஒரு முறை ஒருமையுடன், அதாவது ஒருமனத்துடன் உள்ளன்புடன் பக்தியுணர்ச்சி யுடன் உச்சரித்தால் மகார முதல்வராகிய சிவ பெருமான், ஓதுபவரின் நெஞ்சில் குடியேறி அருள் புரிவான் என்பதை அறிகின்றோம்.

மங்கலச் சொற்கள் யாவற்றிற்கும் தலை யாயதும், தான் மங்கலமாக இருப்பதோடு தன்னைச் செபிப்போர்க்கும், தியானிப்போர்க் கும், பெருமங்கலத்தைத்தரவல்லதும் 'நமசிவய' என்னும் சொல். இச்சொல் மறைகட்கு வித் தாகும். ஞானசம்பந்தப் பெருந்தகையால் 'வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவ' தென் றும், 'செந்தமிழ் ஓம்பிய செம்மை வேதியர்க்கு அந்தியுள் மந்திர, மென்று போற்றப்பட்டதும் 'நமசிவய' என்பதாகும். இச்சொல்லை ''நாவினுக் கருங்கலம்' என்றும், 'நல்ல விளக்கு என்றும், 'நலமிகக்கொடுப்பது' என்றும் நவில் கிறார் நாவுக்கரசர்.

''நமசிவய'' என்பது தூலப், சூக்குமம், அதிசூக்குமம் என்று மூன்று முறைகளால் ஓதப் பெறும். நமசிவய - இது தூலபஞ் சாட்சரம். இதுவே சமய சூக்கும பஞ்சாட்சர மாகும். இதன் தாத்பரியம் நான்கு. அவை பூர்வம், பூர்வ பூர்வம், உத்தரம், உத்தரோத் திரம் எனப்படும். இதில் பூர்வத்திற்குப் பொருள்; சிவனை வணங்குகிறேன் என்பது. பூர்வ பூர்வத்திற்குப் பொருள்; அனாதியில் மலமில்லாத எல்லாமுடையசிவத்திற்கு என் னுடைய சரண உள்ளங்களைச் சமர்ப்பிக் கிறேன்' என்பது, 'சிவாய நம' என்பது இடை விடாமல் உச்சரிக்குப் போது மாலையாக 'நமசிவாய' என வருதல் இயல்பாகும். இதன் பொருளும் ''சிவனுக்குவணக்கம்'' என்பதாகும்.

'சி' என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாததுஎன்பதாகும்.

'வ' என்பதற்குப் பொருள் சர்வ வல் லமையுடையது என்பதாகும்.

'சிவம்' என்பதற்குப் பொருள் சத்து, சித்து, ஆனந்தம் என்பது. இதில் சத்து என்பது சிகரம்; சித்து என்பது வகரம்; ஆனந் தம் என்பது மகரம்.

சிகரம் என்பது எல்லா முள்ளதாய் விளங்குவது; வகரம் என்பது எல்லாம் விளங்கு வதாய் உள்ளது; மகரம் என்பது மேற்சொன்ன இரண்டிலும் நிரம்பிய இன்பம் ஆகும்.

இவ்வளவு விரிவாக சொல்லிய சொல்லின் பொருளை உணர்ந்தோ, அல்லது பொருள் புரியாமலோ, பஞ்சாட்சர மந்திரத்தை வாய்ப்புள்ள போதெல்லாம் யார் ஓதினாலும் அது பெரும் பேறு அளிக்க வல்லது. இது கற் றார்க்கும், கல்லார்க்கும், நல்லார்க்கும் பொல் லார்க்கும், ஏன்? எல்லார்க்கும் களிப்பருளும் திருமந்திரமாகும். இதை ஓதுவார்க்கு இறை யுணர்வையும், இன்ப அன்பையும், நிறை வாழ்வையும், நிம்மதியான நிலையையும் நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத் தையும், இகபர சுகத்தையும் அளிக்கவல்ல சக்தி வாய்ந்தது. இம்மந்திரத்தை வாய்ப் புள்ளபோதெல்லாம் நினைந்து, நினைந்து, அதன் சக்தியை உணர்ந்து உணர்ந்து, மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றுஎழும் கண்ணீரால் உடம்பு நனைந்து நனைந்து ஓதிய நம் காலத்திய மெய் ஞானப் பெருமானாகிய வடலூர் வள்ளற்பெரு மான் இராமலிங்க சுவாமிகள்

''பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய வுடல் மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
''நமச்சி வாயத்தை'' நான்மறவேனே!''

என்று பாடி அருளியுள்ளார்.

''அஞ்செழுத்தின் உண்மை அதுவான
அப்பொருளை
நெஞ்சமுத்தி ஒன்றாகி நிற்கும்நாள்
எந்நாளோ''

என்று பாடுகின்றார் தாயுமான அடிகள்.

''சிவாய நமவென்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளு மில்லை'' என்று, அழுத்தம் திருத்தமாகப் பாடியருளியுள்ளார் புலவர் மாமணியாகிய ஔவை பெருமாட்டியார்.

''நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறிக் காட்டுமே''

என்று பாடி அனைத்துமே நமசிவாய மந்திர மாகும் என்று கூறி நம் நல்வாழ்விற்குரிய வழி யைத் தெளிவாக காட்டியுள்ளார் திருமூலர் தன் திருமந்திரத்தில்.

'நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க'
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்கா
தான் தாள் வாழ்க'

என்று சிவபுராணத்தை தொடங்குகின்றார் திருவாசகம் பாடியருளிய மணிவாசகப் பெருமான். இவர்களைப் போலவே நமக்கு முன்பு தோன்றிய நல்லோர் பல்லோர், நமசிவாய மந்திரத்தின் மகிமையை எடுத்தியம்பி உள்ளனர் என்பதை நாம் உணர் வோமாக. எனவே ஓதுவார் தம்மை நன் னெறிக்கு உய்ப்பது இந்த ஒப்பற்ற திருமந்திர மாகிய 'நமசிவய' என்பதை உணர்ந்து நற் பேறு அடைந்து, நோயற்ற வாழ்வும் குறை வற்ற செல்வமும் பெற்று வாழ்நாள் முழுவதும் மன நிறைவும், மனமகிழ்வும் கொண்டு வள மோடும் நலமோடும் வாழ்வாங்கு வாழ்வோ மாக.

''ஓம் நமசிவாய''

திருச்சிற்றம்பலம்.

# பட்டினத்தார் போற்றிய திருவிடைமருதூர்



**அன்பு அருணாசல அடிமை**

**திருப்பாதிரிப்புலியூர்**

பட்டினத்தடிகளார் சோழ நாட்டின் கடற்கரைப் டட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தமையால் பட்டினத்துப் பிள்ளையாரெனவும் வழங்கப் பெறுவர். இவருக்கு பெற்றோர் இட்ட டெயர் திருவெண்காடர் என்பது. செல்வச் குடும்பத்திற் பிறந்து மனைத்தக்க மாண்புடைய மங்கையை மணந்து பனை வாழ்க்கை நடத்தி வந்தவர். காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்புற்று விளங்கியதால் இவரை பட்டினத்துச் செட்டியார் எனவும் அனைவரும் போற்றினர்.

ஆனால் பட்டினத்துச் செட்டியாருக்கோ நெடுங்காலம் புத்திரப் பேறு இல்லாத பெருங் குறையிருந்து வந்தது. ஆட்கொண்டருளும் திருவிடைமருதன் தானே ஒரு குழந்தை வடிவாய், திருக்கோயிலருகிலுள்ள வில்வமரத்தடியில் கிடக்க இறைவன் ஆணைப்படி சிவசருமர் என்னும் கோயிற்குருக்கள் அந்தக் குழந்தையை பட்டினத்துச் செட்டியாரிடம் சேர்ப்பிக்க, அவரும் அக்குழந்தையைப் பெருமகிழ்வுடன் ஏற்று வளர்த்து வருவாராயினார். அக்குழந்தை மருதப்பிரான் என்னும் திருநாமத்துடன் சகல கலைகளிலும், வாணிகத்தொழில்களிலும் வல்லவராய் வளர்ந்து வருவாராயினார்.

மருதப்பிரான் கடல் கடந்து சென்று, எரு மூட்டையையும், அவல் கடலையையும் கொணர்ந்தார். வியப்படைந்த பட்டினத்தடிகள் எரு மூட்டையையும், அவல் கடலை மூட்டையையும் பிரித்துப் பார்த்தபோது நடுவே மாணிக்கக் கற்களும், பொன் மணல்களும் கலந்திருப்பதைக் கண்டு பெருமகிழ்வடைந்து, தமதருமைத் திருக்குமாரரைத் தழுவி முத்தமிடக் கிட்டினார். ஆனால் மருதவாணர் மறைந்து விட்டார்.

திடுக்கிட்ட பட்டினத்தடிகள் மருதவாணன் பிரிவாற்றாமல் மிகவும் வாடினார். அப்பொழுது அவர் மனைவியார் சிறு பெட்டி ஒன்றினைப் புதல்வர் தந்ததாகக் கணவரிடம் கொடுத்தார். அப்பெட்டியைத் திறந்து பார்த்த பட்டினத்தடிகளார் அதனுள்ளே காதற்ற ஊசி ஒன்றும், ஓலை நறுக்கு ஒன்றும் இருப்பதைக் கண்டார். அந்த ஓலை நறுக்கில், ''காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே'' என்று எழுதப்பட்டிருந்தது. பட்டினத்து அடிகளார் இதனைக் கண்டு பனமுருகி பிறவிநோய்க்குக் காரணமாகிய அவாவை அறவே நீத்துத் துறவறத்தை மேற்கொண்டார். முதன் முதலாக அவர் பாடிய பாட்டைக் காண்போம்.

''மாடுண்டு கன்றுண்டு மக்களுண்
டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட்
டோம் இனிக் கேள் மனமே
ஓடுண்டு கந்தையுண்டுஉள்ளே
யெழுத் தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார்
நமக்குத் துணையுமுண்டே''

எனப் பாடியுள்ளமையானது நம் கவனத்திற்குரியனவாகும்.

பதினொராந்திருமுறையுள் பட்டினத்தடிகள் இயற்றியனவாகக் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, திருவிடைமருதூர்மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என ஐந்து பிரபந்தங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. இப்பனுவல்கள் யாவும் சொற்செறிவும், பொருட்பொலிவுமுடையவை வாய்க் கற்பார்க்கு நவிலுந்தோறும் சுவை பயப்பனவாக உள்ளன.

''ஆண்ட கவல் முன்முறையே வெண்பாகலித்
துறையவந்தாதி மும்மணிக்கோவை முதல்''

என்றபடி அகவல், வெண்பா, கலித்துறைகளால் செய்யுள் இயற்றப்பட்டு அந்தாதித் தொடையால் அமைவது. மும்மணிக்கோவை முப்பது பாக்களை கொண்டுள்ளது. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை பாக்களில் அமைந்துள்ள சிறப்பியல்புகளைக் இனிக் காண்போம்.

(1) மக்கள் மருதப்பிரான் திருவடியை அடைவதற்குரிய வழியினைப் பட்டினத்தடிகள் எதிர்மறை முகத்தான் ஒரு திருப்பாட்டில் விளக்கியுள்ளார். அவர் இவ்வுலகில் வாழும் மக்களை நோக்கி, 'வாழ்நாட்களை வீணாகக் கழிக்கும் பயனற்றவர்களே! நீங்கள் திருவைந்தெழுத்தினைக் கற்கவில்லை. உங்கள் வலிமைக்குத் தக்கவண்ணம் இறைவன் திருப்பணிகளைச் செய்ய விரும்புகின்றிலீர்; அவனது திருப்புகழை எடுத்துச் சொல்லீர்; விபூதியினை உடல் முழுதும் பூசுகிலீர்; ஆசையுடன் உத்திராக்கத்தினைப் பூணீர்; இவ்வாறு ஒன்றும் செய்யாத உங்களுக்கு மருதப்பிரான் திருவடி



யினை அடைதல் எளிதாகுமோ? ஆகாது! ஆதலால் எத்தகைய நற்கதியினையும் நீங்கள் பெற முடியாது'' என இறைவனை வணங்காத மக்களுக்கு அடிகள் எதிர்மறை முகத்தான் இறைவனை அடையும் வகையினைக் காட்டியுள்ளார். இதனை அடிகளார்

''காணீர் கதியொன்றும் கல்லீர்
எழுத்தஞ்சும் வல்ல வண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ்ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திரசாதனம்
நீறெங்கும்பூசுகிலீர்
வீணீர்எளிதோமருதப்
பிரான்கழல் மேவுதற்கே.''

— திருவிடைமருதூர் மும்பணிக்கோவை

என்ற திருப்பாடலினால் அறியலாம்.

(2) திருவிடைமருதூரை இடமாகக் கொண்ட இறைவனைப் போற்றுவார்க்கு உலகிற் சிறந்த பொருள்களும், உயர்குலமும், புகழும் உடல் வன்மையும், பிற உயிர்களிடத்து அருளும், நல்லறிவும் ஆகிய இவையனைத்தும் வந்து சேரும் என்கிறார் அடிகள். இதனைக் கீழ்க் காணும் திருப்பாடலால் உணரலாம்.

''பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்-ஒருவர்
கருதாஎன் பார்க்கும் கறைமிடற்றாய்
தொல்லை
மருதா என்பார்க்கு வரும்.

— திருவிடைமருதூர் மும்பணிக்கோவை

சிவபெருமானைப் போற்றுவோர்க்குபேற் கூறிய செல்வங்கள் அனைத்தும் தாமே வந்து சேரும் என்பது தெளிவாகப்பெறப்படுகின்றது.

(3) பட்டினத்தடிகள் சிவபெருமானாகிய தேனைத் தாம் உண்டு திளைத்ததால் தமக்கு உண்டாகிய நலன்களை ஒரு பாடலில் குறிப்பிட்டு உள்ளார். ''யான் திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய தேனை உண்டு களித்தேன்; ஆனால் இனி எனக்கு நரகத் துன்பமும் கிடையாது. உலகத்திலுள்ள பொருள்களின் மீதுள்ள ஆசையும் அற்றது. எனவே யான் எவரிடமும் சென்று எப்பொருளையும் இனி இரவேன்'' என்றருளியிருக்கின்றார். அக்கருத்தமைந்த திருப்பாடலை நோக்குவோம்.

''வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழி போய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன் புகழ் மாமருதிற்

பெருந்தேன் முகந்துகொண்டுண்டு
பிறிதொன்றால் ஆசை யின்றி
இருந்தேன் இனிச்சென்றிரவேன்
ஒருவரை யாதொன்றுமே.''

— திருவிடைமருதூர் மும்மணிக் கோவை.

''தேனுண்டான் ஒருபுலன் இன்ப நுகரச் சிற்றின்பம் அடைந்து இழப்பன். அங்ஙனமின்றி எல்லாப் புலன்களுக்கும் பேரின்பம் அளித்து அதனிடை மறவாது வைத்தலின் இறைவனைப் பெருந்தேன் என்றார்.'' என்ற குறிப்பு ஈண்டுப் படித்து இன்புறத்தக்கதாகும்.

இத்திருப்பாடலில் பட்டினத்தடிகள் சிவபெருமானைப் பெருந்தேன் என்று பாராட்டித் தேனோடு உருவகப்படுத்தியிருக்கின்றார். இதே கருத்தினைத் திருவாசகத்திலும் (சிவபுராணம்) காணலாம்.

''சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்''

(4) கருணைக் கடலாக விளங்கும் சிவபெருமானை நினைந்து வாழ்த்தி வணங்காமல் தம் வாழ்நாள் வீணாக்கும் பாவிகளாகிய மக்களின் அறியாமைக்கு இரங்குகின்றார் பட்டினத்தடிகள்.

மூப்பழங்களோடு கலந்த அறுசுவை உண்டி செம்மையாகச் சமைத்திருக்கப் பசியால் வருந்தும் ஒருவன் அதனைப் புசித்துப் பசி போக்காது வருந்துதல் அந்த உணவின் குற்றமன்று. வெயிலில் வைத்து ஆற்றிய தெளிந்த நீர் நறுமணமிக்க பொருள்களுடன் கலந்து விளங்க, அதனைத் தண்ணீர் வேட்கை மிக்க ஒருவன் உண்ணாது இருத்தல் அத் தெள்ளிய நீரின் குற்றமன்று, தேன் சிந்தும் பூக்களோடு கூடிய சோலையிருப்ப, வெய்யிலில் வியர்வை அரும்ப நடந்து வரும் ஒருவன் அச்சோலையிற் செல்லாமல் வருந்துதல் அச் சோலையின் குற்றமன்று. அதைப் போலக் கருணை கடலாகித் திருவிடை மருதூரில் வீற்றிருக்கும் மருத வாணரை நினைந்து இறப்புப் பிறப்புக்களின் அச்சத்தைப் போக்கி வாழாத மக்களது குற்றமேயன்றி இறைவனிடத்தில் சிறிதும் தவறில்லை என்று பாடியுள்ளார் அடிகள். இக்கருத்தமைந்த கீழ்க்காணும் வரிகளை நோக்குவோம்.

''மருதிடங்கொண்ட மருதவாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
சிறப்பையும் பிறப்பையும் இகந்து
சிறப்போடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கல் முப்பழம் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம்அன்று வெயிலின் வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்ற மிட்டிருப்ப
மட அஒருவன் விடாஅவேட்கை
தெண்ணீர் குற்றம் அன்று கண்ணகன்று!
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகம் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர்
பொடிப்ப
அடி பெயர்த்திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங்கன்றே''

— திருவிடை மருதூர் மும்மணிச் கோவை

கருணைக் கடலாகிய இறைவன் எங்கும் விளங்கின்றான் என்றும், இறைவனை வணங்காமல் இருப்பது மக்கள் குற்றமே என்றும் கூறியிருக்கின்றார் அடிகள்.

(5) மேலும் தன்னை அறிந்தவனே தலைவனைக் காண்பான் என்னும் கருத்தை நிலைநாட்டுகிறார் அடிகள்.

தன்னை அறிந்து தலைவனையும் அறியும் அளவிற்கு உயிர் தன்னைப் பண்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற கொள்கையும் வலியுறுத்தியிருக்கின்றார்.

''புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப்பாக
பங்கை பங்க கங்கை நாயகநின்
தெய்வத்திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப்படலம் கீறித்தூய
ஞான நாட்டம் பெற்ற பின் யானும்
நின்பெருந் தன்மையும் கண்டேன்
காண்டலும்
என்னையும் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன்என்னே
நின்னைக் காணா மாந்தர்
தன்னையும் காணாத்தன்மையோரே.''

— திருவிடை மருதூர் மும்மணிக் கோவை

ஞான நாட்டம் பெற்ற பின்னரே உயிர் தன்னையும் தலைவனையும் காண இயலும். தெய்வத் திருவருள் கிடைத்த பின் ஞானநாட்டம் பெறலாம் என்னும் கருத்தையும் வலியுறுத்தியிருக்கிறார் அடிகள். மேலும் கூறியிருக்கின்றார்.

''ஆவியொடு காயமழிந்தாலும் மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே மேவியசீர்
வித்தாரமுங் கடம்பும் வேண்டாம்
மடநெஞ்சே
செத்தாரைப் போலவே திரி.''

— பட்டினத்தடிகளார்.

இத்தகைய நுண்ணிய ஞானக்கருத்தமைந்த பாடல்களை பட்டினத்தடிகளார் அமைத்துத் தந்தது நம் கவனத்திற்கு மிகவும் உரியனவாகும். இக்கருத்தமைந்த பாடல்களைப் பின்பற்றி நடப்பது சாலச் சிறந்ததாகும் என்பதனையும் உணர வேண்டும். எனவே இதுகாறும் கூறியவற்றால் இறைவன் கருணைக் கடலாக விளங்குகின்றான் என்பதும், அவனை போற்றினால் பொன்னும், பொருளும், புகழும் அருளும, அறிவும் பெறலாம் என்பதும், சிவபெருமானாகிய தேனை உண்டு திளைத்தவர் இருவகைப் பற்றினின்றும் நீங்கி இம்மை மறுமைப் பலன்களைப் பெறுவர் என்பதும். இறைவன் திருவருள் கொண்டு திருநீறு பூசி, அஞ்செழுத்து ஓதி, மனம் வாக்கு காயங்களால் (திரிகரணசுத்தியுடன்) இறைவனை இரஞ்சுபவர் சிவகதி பெறுதல் திண்ணம் என்பதும் சுருக்கமாக விளக்கப் பெற்றன.

திருச்சிற்றம்பலம்.



## ஆயுதபூஜைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வாழ்த்துரை

கல்வி, செல்வம், வீரம் ஆகிய முப்பெரும் சக்திகளைப் போற்றி இவை மூன்றும சேர்ந்த சக்தியே வாழ்வின் முழு வெற்றிக்கு வழி காட்டும் என்னும் பொருள் உணர்ந்து செய்கின்ற வழிபாட்டின் மூலம், தீயசக்திகள் அழிந்து, நல்லவைகளைப் பெற்றுத் தரும் என்பதை உணர்த்தும் வகையில் கொண்டாடப்படும் திருநாள்தான் விஜயதசமி ஆகும்.

இத்திரு நாளோடு, உழைக்கும் மக்கள் அனைவரும் தாம் செய்கின்ற தொழிலே தெய்வம் என்று வணங்கி கொண்டாடுகின்ற ஆயுத பூஜையும், .மக்களின் கண்களாய் விளங்கும் கல்வியின் மாண்பினைப்போற்றுகின்ற சரசுவதி பூஜையும் இணைந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகின்றன.

வெற்றிக்கு வழி காட்டும் இத்திருநாளை கொண்டாடுகின்ற தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருக்கோயில் நந்தவனம் பராமரிப்பு மற்றும் வளர்ச்சித் திட்டத் தொடக்க விழா !



அறுபத்து மூன்று நாயன்மார்களில், திருக்கோயில் நந்தவனப் பராமரிப்புப் பணியால் சிறந்தவர் முருக நாயனார். ''உண்பதன்முன் மலா பறித்து விட்டு உண்ண வேணடும்'' என்று அறிவுறுத்துகிறார் திருநாவுக்கரசர். ''அலகில் மலர்கள் வெவ்வேறு திருப்பூங்கூடைகளில் அமைத்து'' வழிபட்ட நாயன்மார்கள் நந்தவனப் பராமரிப்பில் பண்டை நாளில் காட்டிய ஆர்வத்தை இந்நாளிலும் புதுக்கிட நம் அறநிலையத்துறை இந்நாளிலும் நந்தவன பராமரிப்பு மற்றும் வளர்ச்சித் திட்டத்தைத் தீட்டியுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்புமிகு தொடக்க விழா திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்று 500 மரக் கன்றுகள் நடப்பெற்றன. நம் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு **துரை. சுந்தரேசன்,** ஐ.ஏ.எஸ். அவர்கள் மரக்கன்றுகளை நட்டு நந்தவனப் பராமரிப்புத் திட்டத்தைத் துவக்கி வைத்தார். துணை ஆணையாளர் திரு தி.ஜெயராமன், பி.ஏ.பி,எல்.,. உதவி ஆணையாளர் திரு வைத்தியநாதன் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர் திரு வெ. சாரங்கபாணி ஆகியோர் இவ்விழாவைச் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தனர்.

திருக்கோயில்கள்தோறும் நந்தவனப் பராமரிப்பை ஆர்வத்துடன் பேண அறிவுறுத்தியுள்ள நம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அறிவுரையை ஏற்று ஆலயங்களின் புனிதத்தை மேம்படுத்திடுவோமாக.



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஆலய மகாசம்ப்ரோட்சணம் 3-9-92 அன்று
மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள்
கண்டு களிக்கும் காட்சி.



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஆலய மகா சம்ப்ரோட்சணம் 3-9-92 அன்று மிகச் சிறப்பாக நடை பெற்றது. தமிழக அரசின தலைமைச் செயலாளர் திருமிகு டி. வீ. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் திருமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சுவாமி தரிசனம் செய்வதை படத்தில் காணலாம். துணை ஆணையாளர் திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., உடன் உள்ளார்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002